விலை ரூபா 6.00

# ஈழநாடு வாரமலர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 7 இதழ் 232
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 24 - 9 - 1995

## ஆர்ப்பாட்ட பேரணி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசு சமீபநாட்களில் தமிழ்மக்களுக்கு விளைவித்து வரும் அனர்த்தங்கள் குறித்து குரல் கொடுக்கும் முகமாக யாழ். நகரில் ஆர்ப்பட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக்கலந்துரையாடலில் அரச வங்கி நலன்புரிச் சங்கம், ப. நோ. கூ. சங்கம். தென்னை ப. அ. கூ. சங்கம், வணிகர் கழகங்கள், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், பாடசாலை அதிபர் சங்கம், செயலக நலன்

[8-ம் பக்கம் பார்க்க]

## சந்திரிகாவின் தீர்வு யோசனை யுத்தத்திற்கே வழிகோலியுள்ளது

(மணிலா)

ஜனாதிபதி சந்திரிகாவின் அதிகாரப் பரவலாக்கல் யோசனை ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வுக்குவழிகோல வில்லை. மாறாக பாரிய யுத்தத்துக்கே வழிகோலியுள்ளது என்று வெரித்தாஸ் தமது விமர்சனத்தில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

சந்திரிகா இனப்பிரச்சினை தீர்வுக்கு முன்வைத்த தீர்வுத் திட்டத்தை. அரசாங்கக் கட்சியைத் தவிர வேறு எந்த ஒரு கட்சியும் ஏற்றுக்கொள்ள

(8ம் பக்கம் பார்க்க)

## கடல்வழி விநியோகத்திற்கு கடற்புலிகள் அச்சுறுத்தல்

(கொழும்பு)

சிறிலங்கா படைகளின் வட பகுதி முகாம்களுக்கான கடல் வழி விநியோகத்திற்கு கடற் புலிகள் கடும் அச்சுறுத்தலாக இருப்பதாக ஜலன்ட்பத்திரிகை தெரிவித்துள்ளது:

முல்லைத்தீவு. திருகோண மலை, காங்கேசன்துறை கடற் பரப்புகளில் குறுகிய காலத்தில் டோரு படகுகள் தாக்கி அழிக்கப்பட்டதாது. கடற் படையின் கடல் வழி விநியோகத்திற்கு கடற் புலிகள் பெரும் அச்சுறுத்தலாக உள்ள தாகவும் ஈடாருக்களை அழித்த தன் மூலம் விநியோ[illegible]க்கப்பல்

(8ம் பக்கம் பார்க்க)

## சவாரித்தம்பர்



சின்னக்குட்டி: அவள் அன்னம் மகன் அந்நிய நாட்டிலை இருந்து அனுப்பிய லட்சத்தை வட்டிக்கு குடுக்கப் போருளாம் வெள்ளை வேட்டி மணியத்தெட்டை குடுத்தால் நல்ல வட்டி தருவார் எண்டு நினைக்கிறுள்.

சவாரித்தம்பர்: வெள்ளை வேட்டி மணியத்தெட்டையோ... அன்னத்தை தமிழீழ வைப்பகத்தில் போட்டு வைக்கச் சொல்லு பனிக்குளிருக்குள் உழைத்த காசு உருகக் கூடாது.

— சிரித்திரன் சுந்தர்.

## ★ யாழ் குடாவைக் கைப்பற்றும்

# பெரும் ராணுவத் திட்டத்துடன் அரசு செயற்பட்டு வருகிறது!

## - லோறன்ஸ் திலகர் குற்றச்சாட்டு -

(லண்டன்)

**விடுதலைப்புலிகளை அழித்து யாழ் குடாவைக் கைப்பற்றும் இராணுவத்திட்டத்துடனே சிறிலங்கா அரசு செயற்பட்டுவருகிறது என்று விடுதலைப்புலிகளின் சர்வதேச பிரதிநிதி திரு, லோறன்ஸ்திலகர் குற்றம் சாட்டியுள்ளார்.**

பி.பி.சிக்கு வழங்கியபேட்டியிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

"இலங்கை அரசாங்கத்தின் தீர்வுத் திட்டங்கள், சமாதான முயற்சிகள் எல்லாம் ஒரு இராணுவத்தந்திரத்திற்குட்பட்ட சமாதான முயற்சியாகவே தற்போது இருக்கிறது".

இலங்கை அரசாங்கத்தின் போக்கைப்பார்த்தால் அது ஒரு இராணுவத்தீர்வில் முடிவைக்காண்பதில்தான் மும்முரமாக ஈடுபட்டுவருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

யாழ். குடாநாட்டை எவ்விதத்திலேனும், எவ்வளவு பொதுமக்களின்உயிர்இழப்பி மத்தியிலும் கைப்பற்றுவது இதேவேளை விடுதலைப்புலிகளையும் அழித்து விடவேண்டும் என்ற ஒரு இராணுவ முயற்சியிலும் அரசு தற்போது ஈடு

(8ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு மோதலில் 3 படையினர் காயம்

(கொழும்பு)

ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் 3 படையினர் படுகாயமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த மூன்று படையினரும் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

-ர-ரி

## திலீபன் நினைவு 9-வது நாள் உணர்வுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தின் ஒன்பதாவது நாளான நேற்று யாழ். மாவட்டம் முழுவதும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தியாகிக்குஅஞ்சலிசெலுத்து முகமாக யாழ். மாவட்டத்தில் கோட்ட ரீதியாக அமைக்கப்பட்ட விசேட பந்தல்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உண்ணாவிரதம் அனுஷ்

(8ம் பக்கம் பார்க்க)

## அரசின் திட்டமிட்ட தாக்குதல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

### வெகுஜன அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் திட்டமிட்ட அரக்கத்தனமான தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழ் மக்களது வாழ்க்கையில் இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசின் மீது அழுத்தங்களை கொடுப்பதுடன் சிறிலங்கா அரசிற்கான ஆயுத விநியோகமும் முற்றாகத் தடுக்கப்படல் வேண்டும் என யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

பேரினவாத சிறிலங்கா அரசின் மிலேச்சத்தனமான விமானக் குண்டு வீச்சு, எறிகணை வீச்சுக்களை வன்மையாக கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- சிறிலங்கா அரசானது இனவாத நோக்குடன் தமிழ் மக்கள் மீது பாரிய ஒடுக்கு முறைகளைத் தொடர்ச்சியாக கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கெதிரான கொடூர வன்முறைகளை நிறுத்துமாறு பல தடவைகள் சிறிலங்கா அரசைக் கோரியுள்ளோம்.

(8ம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தை பகுதியில் 30தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தையிலுள்ள உணவு விடுதிகளில் வைத்து முப்பது தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களில் இக் கைது சம்பவம் இடம்பெற்றது. வெள்ளவத்தையிலுள்ள இரு சைவ விடுதிகளைச் சுற்றிவளைத்த பொலிசார் விடுதியில் நின்ற முப்பது தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

-மீ

## வரி விளம்பரம்

### வெளிவந்துவிட்டது

க.பொ.த (உ/த) G.C.E. (A/L) புதிய பாடத் திட்டத்திற்கு அமைய சங்ககாலம் தொடக்கம் இக்காலம் வரையும் "செய்யுட் கோவை". ஆக்கம்: பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு வே) கிடைக்குமிடம் ஸ்ரீ சுப்பிரமணியம் பொத்தகசாலை, 235, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (ஏ-5314)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா, மூட்டுவாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார் வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1667)

### ரி. வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் I. C, அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனா, பூஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஓடியோ கசற் வகைகளையும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்: அன்ரனா பொருத்திக் கொடுக்கப்படும்; புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5245)

### ஆண்டு - 5 புலமைப் பரிசில் +

பாடசாலை அனுமதி பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள்-விடைகளுடன் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அடுத்த வெளியீடு 24-9-95 ஞாயிறு.

**BOND**

யாழ்ப்பாணம் (ஏ-5332)

# D. M. I

(233, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்)

## A/L DAY CLASS

(பகல் நேர வகுப்பு)

**பிரிவு I** நடைபெறுகின்றது

**பிரிவு II** வெகுவிரைவில் ஆரம்பம்

கணக்கியல் - D. SAM
வர்த்தகம் - B. பசில்
பொருளியல் - R. இராஜேஸ்வரன்
அளவையியல் - S. சோதிலிங்கம்

(ஏ-5327)

# பொருளியற் கல்லூரி

110/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமை)

## A/L 96 DAY CLASS

(பாடசாலை செல்லாத மாணவர்கட்கு)

**முழுப் பாடத்திட்ட வகுப்பு**

| | |
|---|---|
| பொருளியல் — | வரதராஜன் |
| கணக்கியல் — | சௌந்தி |
| வர்த்தகம் — | வரதன் — சிவா |
| அளவையியல் — | சர்மா |
| இந்துநாகரீகம், இந்துசமயம் | காரை கெங்கா |
| தமிழ் — | திருமதி மீரா |
| புவியியல் — | சண் |
| கிறிஸ்தவம் — | நிரஞ்சன் |

**ஆரம்பம்:- 25-09-95 திங்கள் 8.00 a. m.**

(ஏ-5313)




இரு மாதங்களுக்கு ஒரு முறை

## ★ 10 பெறுமதிமிக்க பரிசில்கள் ★

உங்களுக்கு காத்திருக்கின்றன

★ 1-ம் பரிசு - சுவர் மணிக்கூடு
★ 2-ம் பரிசு - எவர்சில்வர் பொருட்கள்
★ 3-ம் பரிசு - T செட்

மற்றும் ரூபா 200/க்கு மேற்படாத 7 ஆறுதல் பரிசில்கள்

★ 1. குடை
★ 2. தொப்பி / சாப்பாட்டுப் பெட்டி
★ 3. அல்பம் [ALBUM]
★ 4. பாடசாலை பை
★ 5. பிளாஸ்டிக் வாளி
★ 6. எவர்சில்வர் பேணிகள்
★ 7. கை மணிக்கூடு

இவற்றை வென்றிட நீங்கள் செய்யவேண்டியது இதுவே:

★ உங்களுக்கு அருகில் உள்ள எமது போத்தல் சேகரிப்பு நிலையத்தில் பின்வரும் போத்தல்களில் யாதேனும் நான்கை (4) கொடுத்து அதற்குரிய பணம் 20/-ஐ பெறுவதுடன் ஒரு பரிசுச் சீட்டையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்:

போட்டிக்கு ஏற்கப்படும் போத்தல்கள்:

1. ஜாம் (JAM)
2. கோடியல் (CORDIAL) [வெள்ளை / கறுப்பு]
3. விவா / ஹார்லிக்ஸ் (450 g) பிளாஸ்டிக் மூடியுடன்
4. பியர் (BEER)

இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பாருங்கள்.

★ முதலாவது சீட்டிழுப்பு ஒக்டோபர் 16-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

பரிசு பெறுவோரின் விபரங்கள் பத்திரிகை வாயிலாகவும், தபால் மூலமும் அறிவிக்கப்படும்.

பின்வரும் இடங்களில் போத்தல்களை ஒப்படைக்கலாம்:

[1] ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [2] சபாரீஸ் - சுண்டுக்குளி. [3] பேப்பர் சொப் - இருபாலை.
[4] சுபாஸ் பேக் கவுஸ் - நெல்லியடி. [5] மாருதி - வல்வெட்டித்துறை.
[6] வாசுகி ஸ்ரோர்ஸ் - சுண்டுக்குளி. [7] நியூ வசந்தா - சின்னக்கடை.
[8] தாஸ் ஸ்ரோர்ஸ் - கலாசாலை வீதி, திருநெல்வேலி.
[9] விநாயகர் - கல்வியங்காடு. [10] ஜெயசக்தி பார்மஸி - மருதனார்மடம்.
[11] யாழ்த்றன் ஸ்ரோர்ஸ் - கொக்குவில். [12] S. R. மகேந்திரன் ஸ்ரோர்ஸ் - கோண்டாவில் 13. அம்பிகை வர்த்தக நிலையம் - திருநெல்வேலி.
[14] அன்புக்களஞ்சியம் - ஆஸ்பத்திரி வீதி. [15] வேல் களஞ்சியம் - தட்டாதெரு.
[16] செல்வச்சந்நிதி ஸ்ரோர்ஸ் - வல்வெட்டித்துறை [17] தரனி - திருநெல்வேலி.
[18] றிக்கோ ரேடேஸ் - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [19] இராஜேஸ்வரி - சாவகச்சேரி. [20] யூனியன் பேக்கவுஸ் - சாவகச்சேரி.
[21] செல்வராசா ஸ்ரோஸ் - பருத்தித்துறை.

# Taste Line Industries (Pvt) Ltd.

**14, SEENIAR LANE, JAFFNA.**

(ஏ-5330)

## விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்ருஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும், வீடியோ கமரா, ரீ. வி. டெக் றேடியோக்கள் மணிக்கூடுகள் திருத்துவதற்கும்

வீனஸ், டில்கா வாச் & றேடியோ வேக்ஸ்
284. ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி
Our Qualified Experienced Technical & Tutorial Staff

T. THANABALASINGAM B. Sc [Ceylon]
Dip-in Electronic Engineering [Lond]
[Specialist in V. C. R Service] [A 5316]

# பிஜித்தீவு - ரணில் - இந்திய ஆய்வு - பாக்கியநாதன் - பெளத்தமதம்

## வார சாரம்

ச. தியாகராசா

பிஜித்தீவில் உள்ள தமிழ் மக்கள் தனிநாடு கோரி போராட்டத் தொடங்கியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அவுஸ்திரேலியாவுக்கு சமீபத்தில் உள்ள பிஜித்தீவில் உள்ள சனத்தொகையில் பெரும்பான்மையோர் தமிழர்கள். அங்கு வாழும் தமிழர்களில் ஒரு பகுதியினர் தனிநாடு கோரி சதிமுயற்சியில் ஈடுபட்டுள்ளதாக புலனாய்வுத் துறையினர் அரசுக்கு தெரிவித்



துள்ளனர். இதை வைத்துக் கொண்டு தமிழ் மக்களை நாடு கடத்த பிஜித்தீவின் அரசு முயற்சி எடுத்தமை எதிர் விளைவுகளை உருவாக்கியுள்ளதாம். இந்த விவகாரத்தை வைத்துக்கொண்டு ''லங்கா தீப'' என்ற சிங்களப் பத்திரிகை மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதுபோல் பிஜித்தீவில் தனிநாடு கோரும் தமிழ்த் தலைமையின் பின்னணியில் தமிழீழத்தேசியத்தலைவர் வே. பிரபாகரன் விளங்குகிருர் என்று கூறுவதுதான் வேடிக்கையான விடயம்,

### ரணிலின் தந்திரம்

வடக்கில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அதை நடத்திக் கொண்டிருப்பவர்கள் விடுதலைப்புலிகள். அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் பிரதி நிதிகள் இல்லை. ஆகவே அவர்கள் நாடாளுமன்றத்தில் தீர்வுத்திட்டம்பற்றி பேசமுடியாது. இந் நிலையில் விடுதலைப் புலிகளுடன் தொடர்பின்றி நாட்டில் எவ்விதம் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா சந்திரிகாவை நோக்கி கேள்வி எழுப்பியுள்ளார். இது சந்திரிகா தன்னுடன் ரூபவாஹினியில் விவாதம் செய்யவரும்படி ரணிலை கேட்டதற்குப் பதிலாகவே விடப்பட்டுள்ளது எதிர்க்கட்சியில் இருக்கும்போது எதையும் பேசலாம் கேட்கலாம். ஆசனத்துக்கு வந்து விட்டால் எல்லாம் தலைகீழாக மாறிவிடும். சந்திரிகா அம்மையாருக்கு இது தான் நடந்தது.

### இந்திய ஆய்வு

அண்மையில் சிறிலங்கா வந்த அமெரிக்க அரசின் பிரதிநிதி சிறிலங்காவுக்கு பாதுகாப்புக்குத் தேவையான ஆயுதங்களை மட்டுமே வழங்கப்படும் என்று கூறியதும் விடுதலைப்புலிகளை தடைசெய்யும் விடயத்திலும் அரசின் கோரிக்கையை அவர் ஏற்காததும் அமெரிக்க அரசு விடுதலைப்புலிகள் சம்பந்தமாக மென்மையான போக்கை கடைப்பிடுப்பதும் சிறிலங்கா அரசுக்கு மாத்திரமன்றி இந்திய அரசையும் சிந்திக்கவைத்துள்ளது. இந்திய அதிகாரிகள் இது பற்றி ஆராய்ச்சி செய்கிருர்கள். விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் இந்திய அரசியலில் பலமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதால் அவர்கள் பற்றி உலகின் ஒரேவல்லரசான அமெரிக்கா பின்பற்றும் மனப்போக்கு இந்தியாவுக்கு முக்கிய விடயமாக இருப்பது வியப்பிற்கு உரியதல்ல.

### பாக்கியநாதன்

அன்ரனேவ் ஆகாய விமானம் விழுந்து நொருங்கியது எவ்விதம், யாரால், யந்திரக் கோளாறினலா அல்லது சீர் கெட்ட காலநிலையினலா என்றெல்லாம் துருவித்துருவி ஆராயப்படுகிறது. வேறு நாடுகளிலிருந்து நிபுணர்கள், நவீன மீட்பு இயந்திரங்கள் போன்றன வந்துள்ளன. இன்னும் வரவும் இருக்கிறது. ஆனல் இவையெல்லாம் ஒரு பக்கம்இருக்க விமானம் ஓட்டி பாககியநாதனின் பெயரும் பிரபலமாகியுள்ளது. அவர் சிங்கள மக்களாலும் அரசாலும் ஒரு கரும்புலித் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார். எதை எதையோ மூடிக்கட்டுவதற்கு அரசினல் அவர் பயன்படுத்தப்படுகிருர். எத்தனை தமிழ் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் சிதறடித்த இந்த ஒரு சொல் தமிழ்தானும் தெரியாத அரைகுறைத் தமிழன். தமிழர்களைப் பொறுத்தளவில் ஒரு துரோகி. சிறிலங்கா அரசுக்கும் சிங்களவர்களுக்கும் வக்காலத்துப் பிடித்து அண்டி பிழைக்கும் தாசர்களுக்கு பாக்கியநாதன் இன்று அல்லோலப்படும் நிலை ஒரு பாடமாக இருக்கட்டும்.



### பெளத்தமதம்

பெளத்தமதம் சிறிலங்காவில் பாதுகாக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக சீரழிக்கப்படுகிறது. இதைக் கூறுவது ஒரு தமிழர் அல்ல யப்பானிய நாட்டு பெளத்த மதகுரு கலாநிதி ஜீன் அகோக்கி என்பவர் தான் கூறுகிருர். அண்மையில் சிறிலங்கா வந்த அவர் இங்கு பெளத்த மதம் கடைப்பிடிக்கப்படுவது தொடர்பான முழு அம்சங்களையும் நேரில் கண்டறிந்

[7-ம் பக்கம் பார்க்க]

நமது நோக்கு

# வடமராட்சிப் படுகொலைகள்

வடமராட்சி மீது சிறிலங்கா விமானப் படையும் இராணுவமும் நேற்று முன்தினம் அதிகாலையிலிருந்து மாலை வரை மாறி மாறி நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் 18 பாடசாலை மாணவ, மாணவிகள் உட்பட 40க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொலைப் பட்டுள்ளார்கள். 150 க்கும் அதிகமானேர் காயமடைந்துள்ளனர். மக்களின் பெருமளவு சொத்துக்களும் நாசமாகிவிட்டன. தாக்குதலுக்கு அஞ்சி மக்கள் வடமராட்சிப் பிரதேசத்தை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

சிறிலங்கா அரசின் பாரிய தாக்குதல் இதுதானு? எட்டாத தொலையிலிருந்து குண்டுகளைப் பறிப்பதும், தொலையில் இருந்து ஷெல் அடிப்பதும் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்வதற்கா அல்லது அப்பாவிப் பள்ளிச் சிறுர்களையும், பொதுமக்களையும் கொல்வதற்கா? இவர்கள் அரசுக்கெதிராக என்ன குற்றத்தைப் புரிந்தனர்? அரச பாடசாலைகளில் படிக்கும் மாணவ மாணவிகள் எதிர்பார்க்காத நிலையில் விமானக் குண்டு வீச்சுக்கு உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். இராணுவம் தான் செய்யும் துஷ்டச் செயல் பற்றி மக்களுக்கு முன்னறிவித்தலாவது கொடுத்திருந்தால் மக்கள் தப்பியாவது ஓடியிருப்பார்கள்.

சிங்களப்பகுதி பஸ்ஸில் வந்த பள்ளிச் சிறுர்கள் பாதுகாப்பில்லாத றெயில் கடவையில் றெயிலால் மோதி மரணமானபோது சிங்கள தேசமே கிளர்ந்து எழுந்து கூக்குரல் எழுப்பியது. அதன் காரணமாக பாதுகாப்பில்லாத றெயில் கடவைகளுக்குப் பாதுகாவலர்கள் உடனடியாக அரசினல் நியமிக்கப்பட்டார்கள். ஆனல் எமது பள்ளிச் சிறுர்கள்மீது அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக புக்காராவின் குண்டு வீச்சுக்களுக்கும் எறிகணைத் தாக்குதல்களுக்கும் ஆளாகிருர்கள். தட்டிக் கேட்க ஆட்கள் இல்லை என்று அரசு நினைக்கிறது போலும்.

தமிழ் மக்கள் மீது இராணுவம் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இவ்வினைச்செயலை உலகம் அறிந்துவிடப்படாது என்பதற்காக அரசு செய்தித் தணிக்கையை அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தியுள்ளது யுத்தப் பிரதேசங்களில் நடக்கும் அநியாயம் உலகுக்குத் தெரிந்துவிடுமே அதனல் அரசுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுவிடுமே என்று பயந்து செய்தித் தணிக்கையை அமுல்படுத்திவிட்டு அரசு இனப்படுகொலைக்கு இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இனப்படுகொலை செய்து தமிழ் மக்களை இம்சைப் படுத்தும் அரசு பின்னர் தமிழ் மக்கள்மீது ஆட்சிசெலுத்தலாம் என்று எண்ணுகிறதா? அல்லது தமிழ் இனத்தையே முற்முக அழித்துவிட்டு சிங்களவர்களை எமது பிரதேசங்களில் குடியேற்றலாம் என்று அரசு எண்ணுகிறதா? இக்கனவுகள் ஒன்றும் நிறைவேறப் போவதில்லை. அரசின் இச்செயல் ஒன்றைத்தான் கொண்டுவரப் போகிறது. தமிழ் மக்கள் இறந்து வைத்திருக்கும் சமாதானக் கதவுகள் இறுகப் பூட்டும் நிலைக்குத் தள்ளப்படுவர். அப்போதுதான் அரசுக்கு சுடலை ஞானம் பிறக்கும். ஆனல் அப்போது தமிழீழம் மலர்ந்துவிடும்.

# ஒரு நிமிடத்தில் 500 எவுகணைகளை வீசும் புதிய அமெரிக்க யுத்தக் கப்பல்

## உலக வலம்

காவியமல்ல, ஓவியமுமல்ல. கட்டுக்கதையுமல்ல. கற்பனைக் கதையுமல்ல. நிஜமாகவே ஒரு ஆயுதக் கப்பல் உற்பத்தியாகவுள்ளது. அமெரிக்காவில். அமெரிக்கா திட்டமிட்டு தயாரிக்கவுள்ள இந்த ஆயுதக் கப்பல் உலகப்போரின் வடிவத்திலேயே ஒரு புரட்சியை கொண்டு வரவுள்ளது.

கடலில் மிதக்கும் இந்தக் கப்பல் குறிப்பிட்ட இலக்குகளை நோக்கி ஒரு நிமிடத்தில் 500 ஏவுகணைகளை வீசும் வல்லமையுடையது. இது உற்பத்தியாகி வெளிவருமாஞல் எதிரிகள் தாங்கள் தற்போது வைத்திருக்கும் சகல நவீன ஆயுதங்களையும் அழித்துப் புதிய முறையொன்றைக் காணவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

ஒரு பக்கத்தில் ஏவுகணை ஒழிப்பு, அணுகுண்டு ஒழிப்பு எனப் பிரகடனம் செய்யும் அமெரிக்கா இந்தக் கப்பலை உற்பத்தி செய்து உலகில் தான் தான் தலை சிறந்த சண்டியன் என்பதை நிரூபிக்கப் பார்க்கிறது.

தற்போது பாவனையிலுள்ள கடற்படைக் கலங்களிலும் பார்க்க இந்த மிதக்கும் ஏவுகணைக் கப்பல் மலிவானது. தற்போதைய கடற்படை 5000 கடற்படையுடன் வருட பராமரிப்புக்கு 440 மில்லியன் செலவு ஏற்படுகின்றது. இதனைச் சூழ நீர்மூழ்கிக்கப்பல்கள் நாசகாரிகள், கண்ணி அகற்றும் கப்பல்கள் செல்லவேண்டியுள்ளது. தயாராகவுள்ள புதிய கப்பலைக் கட்ட 700 மில்லியன் டொலரே தேவை. இருபது கடற்படையினருடன் செலவுகளைக் குறைத்துக் கொள்ளலாம். இன்னும் எதிரியின் தாக்குதலில் இருந்து தப்பக்கூடிய வாய்ப்பு இதற்கு அதிகம் உண்டு.

தற்போதைய 132 பொம் 4 மார்கள் போர் தொடங்கிய நாட்களில் 420 எதிரியின் இலக்குகளைத் தாக்கும். விமானம் தாங்கிக் கப்பல் 1080 இலக்குகளை தாக்கும். ஆனல் இதே காலப்பகுதியில் புதிய போர்க் கப்பலிலிருந்து 4000 எதிரி இலக்குகளை தாக்கமுடியும் என 'பென்ரகன்' எனும் அமெரிக்க உளவுப் பிரிவு தெரிவிக்கின்றது.

தற்போது அமெரிக்கா கைவசமுள்ள பாரிய போர்க் கப்பல் 122 சுடு குழாய்களையே கொண்டுள்ளது. ஆனல் புதிய கப்பல் 500 சுடு குழாய்களைக் கொண்டிருக்கும்.

825 அடி நீளமுள்ள புதிய ஆயுதக் கப்பல் இரு கிடங்குகளைக் கொண்டிருக்கும். இதனல் எதிர்த் தாக்குதல்களையும் எதிர்கொண்டபடி தன் கடற்பயணத்தை மேற்கொள்ளும். கடலிலும் அதன்வெளிப் பாகம் குறைவாகவே தெரியக்கூடியதாக பயணிக்கும். இதனல் எதிரியின் கண்களில் இருந்தும் தப்ப வாய்ப்புண்டு.

தற்போது நடைபெறும் பொஸ்னியாப் போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமாயின் தற்போது பாரிய தாக்குதல் அணி, கனரக வண்டிகள் பாரிய சுடுபடைக்கலங்கள் தேவையாய் இருப்பதோடு நாட்கணக்கில் போர் இழுபடவும் செய்யும். ஆனல் நவீன போர்க் கப்பலானது இதில் ஐந்திலொரு பங்குடனை செலவுடனும் குறுகிய காலத்திலும் போரை முடிவுக்குக்கொண்டுவரும். இவ்வகையில் வருங் காலத்தில் எழும் போர்களில் வெகுவிரைவில் முடிவுக்கு கொண்டுவரும் வாய்ப்பு இந்த தயாராகும் 'நவீன சண்டியன்' கப்பலுக்கு உண்டு. லேசர் கருவிகள்நவீன படக்கருவிகள் மற்றும் உணர் கருவிகள் மூலம் எதிரியின் இலக்குகளை தெரிந்தெடுத்து தாக்கும் வல்லமை இந்தக் கப்பலுக்கு இருக்கும்.

சோவியத் ரஷ்யாவுடன் போரிடவே தற்போதைய போர்க் கலங்கள் அமைக்கப் பட்டன. எதிர்காலத்தில் வல்லவனுக்கு வல்லவன் தோன்ருமல் இருக்கும் வகையிலேயே அமெரிக்கா இந்தப் போர்க் கப்பலை உற்பத்தி செய்ய திட்டமிட்டு வருகின்றது.

கவிதாஸ்

# ஜே.ஆரின் 89ஆவது பிறந்த தினமும் அவரது "நிர்பாணமும்" (NIRBANA)

"பாவமும் புண்ணியமும் செயல்களைச் சாராது; செயல்களின் நோக்கங்களையே சாரும்"

- பகவத்கீதை.

மன்னுதி மன்னரெங்கே
மாமனிதீ நோனரெங்கே
என்னுடன் தம்பியெங்கே
இலக்கணகுமாரன் எங்கே
கர்ணனும் தேருமெங்கே
கரைகொள்ளாச்
சேனையெங்கே

மகாபாரதப் போரில் துரியோதனன் தனது பெரும் தளபதிகளையும் அக்குரோணி சேனைகளையும் இழந்தபின் பாடுவதான பாடல் இது.

தனது 89ஆவது பிறந்த தினத்தை ஜே. ஆர். ஜெயவர்த்தன கடந்த 17ஆம் திகதி கொண்டாடினார். அதனை யொட்டி ஏ. ஸி. எஸ். ஹமீத் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் ஜே. ஆருக்கு புகழாரம் சூட்டி ஒரு கட்டுரை எழுதினார். அதில

"கடந்த 50ஆண்டு காலத்தில் மூன்றாம் உலக நாடுகள் கண்ட மிகச்சிறந்த அரசியற் தலைவர்களுள் ஜே. ஆரும் ஒருவர்" என்றுரைஎழுதினர் ஹமீத். தன்னைப்பற்றி ஜே. ஆர். கூறினார்:- "இப்பிறப்பிலேயே நான் 'நிர்பாணம்' [Nirpana] அடைந்து விடுவேன்"

"பாவம்", "புண்ணியம்" எனும் கர்மக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது பௌத்த மதம்.

ஜே. ஆர். 50 ஆண்டு காலமாய் அரசியலில் ஈடுபட்டவர்; அமைச்சராய், எதிர்க்கட்சித் தலைவராய், பிரதமராய், ஜனாதிபதியாய் இப்படி நாட்டின் மிகப் பெரும் பதவிகளில் எல்லாம் அமர்ந்தவர். இவர் இந்தப் பதவிகளிலெல்லாம் இருந்து செய்த செயல்களின் நோக்கமென்ன?

ஜே. ஆரை ஒரு "சிறந்த ராஜதந்திரி" என்று புகழ்கிறார்கள். அவர் ஒரு தந்திரசாலி என்பது உண்மைதான். ஆனால் அவரது தந்திரம் எதற்குப் பயன்பட்டது? அவர் தந்திரங்களை உன்னதமான நோக்கங்களுக்காகவல்ல கீழ்த்தரமான நோக்கங்களுக்காகவே பயன்படுத்தினார்.

ஜே ஆரின் சாதனை என்ன? அமைச்சராய், எதிர்க்கட்சித்தலைவராய், பிரதமராய், ஜனாதிபதியாய் இருந்தார் என்பவையா?

அப்படிச் சிலர் சொல்லலாம். ஒருவரைப் பற்றி மதிப்பீடு அவர் அனுபவித்த சுக போகங்களை மையமாகக் கொண்டு செய்யப்படுவதில்லை. மாறாக அவர் சமூகத்திற்கு என்னத்தை விட்டுச்சென்றார்? அவர் எதற்காக வாழ்ந்தார் என்பதிலிருந்தே செய்யப்படுகிறது.

ஜே. ஆர். தனது அடுத்த தலைமுறையினரிடம் விட்டுச் சென்றிருப்பது என்ன? அவர் எதற்காக வாழ்ந்தார்? அவர் செய்த கைங்கரியங்கள் என்ன?

★ இலங்கை வரலாறு எப்போதும் கண்டிராத இனப் படுகொலையை 1983 யூலையில் நடத்தினார்.

★ இவரது ஆட்சியின் கீழ்த் தான் மிகப்பெரும் இராணுவ அட்டூழியங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

★ வரலாறு முன்னெப்பொழுதும் கண்டிராத அளவு பெரும் எண்ணிக்கையில் அந்நிய இராணுவத்தை 1987 ல் ஆண்டு அழைத்தார்.

★ இவரது ஆட்சியின் கீழ் தான் ஒரே நேரத்தில் இலங்கையின் வடமுனையிலும் தென் முனையிலும் குருதிப் புனல் பாய்ந்தது.

★ இலங்கைத் தீவை முற்றிலும் யுத்தத்திற்குள் அமிழ்த்தி அரசியல், இராணுவ, பொருளாதாரரீதியிலும் இலங்கையை அந்நியருக்கு இரையாக்கினர்.

★ உயர் நீதிமன்ற நீதிபதி பதிகளை குண்டர்களால் தாக்கினர்.

★ தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை வாங்கினார்.

★ 1980 இல் பொது வேலை நிறுத்தம் செய்தோரை வேலையிலிருந்து நீக்கினர்

★ அபேர்த்திமிக்க பொது ஜன வாக்கெடுப்பை (Referendum) நடாத்தினர்.

இவை இலங்கையின் புற உருவத்தில் அழியாத கோடுகளாய் பதிந்துள்ளன.

இதில் வலக்கரமான தளபதி லலித் அத்துலத்முதலி, இடக்கரமான தளபதி காமினி திஸநாயக்கா இவ்விருவரினது குடும்பங்களும் சு. க.வைப் பின்னணியாகக் கொண்டிருந்தவை.

லலித் அத்துலத்முதலியின் தந்தை அத்துலத்முதலி, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மிக நெருங்கிய நண்பர் லலித் வெளிநாடு சென்று படிக்கப் பணமில்லாது இருந்தபோது பண்டாரநாயக்கா அரச பணத்தை லலித்திற்காக ஒதுக்கி லலித்தின் படிப்பதற்கான புலமைப் பரிசிலாக வழங்கினார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்துக் கொண்ட லலித் கோலாகலமான முறையில் திருமணம் செய்தார். லலித்தின் மனைவி ஜெயமானே என்ற இனருவுடன் கள் எக்காதல்கொண்டிருந்ததாக லலித் சந்தேகித்து ஜெயமானேவுக்கு அசிட் வீசினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சில தினங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். இதனைத்தொடர்ந்து மனைவி லலித்தை விவாகரத்துச் செய்து கொண்டார்.

இத்தகைய பின்னணியினைக் கொண்ட லலித்தை ஐ.தே.க விற்கு சேருமாறு ஜே. ஆர். அழைப்பு விடுத்தும் பின்பு உயர் அமைச்சுகளை கொடுத்தும் தனது வலக்கரமாக்கினர். தனக்குப் பின்னர் தன் வாரிசாக ஜே. ஆர். அவரைக் கருதினர். ஆனால் அவரின் கைங்கரியங்களுக்குப் பரிசாய் அவரை ஜே. ஆர். இழந்தார்.

ஜே. ஆரின் இடதுகைத் தளபதியாய் வளர்க்கப்பட்ட காமினி திஸநாயக்கா இலங்கையில் உள்ள விரல் விட்டெண்ணத்தக்க கோடீஸ்வரர்களுள் ஒருவர். இவரது தந்தை திஸநாயக்கா சு. க வின் பெருந்தூண்களில் ஒருவர். கண்டிச் சிங்களவரான காமினியை பல நோக்கங்களுக்காக ஜே. ஆர். வளர்த்து தனது இரண்டாவது வாரிசு நிலைக்கு உயர்த்தினர். இந்த வாரிசையும் ஜே. ஆர். உயிருடன் இருக்கும்போதே பறிகொடுத்தார்.

ஜே. ஆரால் வளர்க்கப்பட்ட அவரது அடுத்த அரசன் ரெனில் டி. மெல். இவர் இரத்தமும் தசையுமாக சு. கவைச் சேர்ந்தவர். இவர் ஜே. ஆரை நடுத்தெருவில் நிற்கவிட்டு கட்சியைவிட்டும் நாட்டை விட்டும் ஓடியவர்.

ஜே. ஆரின் நெற்றிக்கண் போன்றவர் அவரது மகன் ரவி ஜெயவர்த்தன. இவர் நம்பிக்கைக்குரிய பாதுகாவலராய் வளர்க்கப்பட்டு எஸ். ரீ. எவ். இன் பொறுப்பாளராய் இருந்தார். பிரேமதாசாவின் வரவுடன் இந்த இலக்கனக் குமாரனும் களத்திற்கு வெளியே துரத்தப்பட்டார்.

இத்தகைய நிலவரங்களின் பின்னணியில்தான் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் 89-வது பிறந்த தினத்தை நோக்க வேண்டும். தான் அடித்துப் போடப்பட்டுள்ள ஒரு பாம்பு என்று ஜே. ஆருக்கு விளங்கும். ஆனால் அது ஹமீத்திற்கு இன்னும் தெரியவில்லையே.

உன்னதமானவர்களுக்கு மரணத்திலும் வாழ்வுண்டு. கேவலமானவர்களுக்கு வாழ்விலும் நரகமே மிஞ்சும் என்பதை ஜே. ஆர். தனது வாழ்க்கைப் புத்தகத்தில் தன்னைப்பற்றிப் புரிந்துகொள்வார்.

மு. திருநாவுக்கரசு

---

# ஈழக்கடலில் ஆழக் காலூன்றிய சோழர் வழியில் வேங்கைக் கடல் வீரர்

அசேலா:

(கி.மு. 155-145)

சேன, குத்த என்ற இரு தமிழ் அரசர்களையும் அசேலா என்பவர் வென்றுபத்துஆண்டுகள் அரசாட்சி செய்தார்.

எல்லாளன் (Ellara)

(கி.மு. 145-101)

இவன் ஒரு தமிழ் அரசன் இவனைப்பற்றிய முழு விபரங்களையும் முந்திய அத்தியாயமொன்றில் கூறியிருக்கின்றேன். 'அபய' என்று அழைக்கப்படும் துட்டகாமினி (கி: மு. 101-77 வரை) லாமல் இருக்கமுடியும்?" என்று கேட்டானும் என்று பாளி நூல்கள் கூறுகின்றன.

துட்டகைமுனுவைச் சிங்களவர் மாபெரும் வீரனாகக் கற்பனை செய்தாலும் கூட இவன் ஒரு மாபெரும் வீரனல்ல, பதிலாக ஒரு குள்ளநரி என்று வேண்டுமானால் அழைக்கலாம். ஏனெனில், வயதான தமிழ் மன்னனை எல்லாளனின் படைகள், கடல்போல் திரண்டு நிற்பதைப்பார்த்து விட்டு, தான் எல்லாளனை உண்மையான சண்டைபிடித்து வெல்ல முடியாது என்பதை உணர்ந்து மனசாட்சியற்ற குள்ளநரித்தனமாகக் கொன்றுவிட்டான். அதனால் ஒரு தமிழரசனின் 44 ஆண்டுகாலச் சிறப்பான ஆட்சியை ஒரே நொடிக்குள்அழித்துவிட்டான் துட்டகைமுனுவின் இந்த வரலாற்றுப் பழியை இன்றும் சிங்கள இனம் சுமந்துகொண்டு தான் நிற்கிறது.

சடாதிஸ்ஸ

[SADHATISSA]

[கி. மு. 77—59]

துட்டகைமுனு 24 வருடங்கள் ஈழமண்ணை ஆட்சி புரிந்துகொண்டிருந்த வேளை சடாதிஸ்ஸ என்பவன் ஆட்சியைப் பிடித்தான். இவன் (18) பதினெட்டு வருடங்கள் ஆட்சி செய்தான்.

அத்தியாயம் — 8

துலாதன

[THULATHANA]

லஜ்ஜிதிஸ்ஸ

LAJJITISSA

மேற்படி இரு அரசர்களும் சடாதிஸ்ஸவின் பின்னர் ஆட்சி பீடமேறி, மிகக் குறுகிய காலமாக பத்தரை மாதங்கள் ஆட்சி செய்தனர்.

கலதநாகா

KHALATANAGA

[கி. மு. 49-43]

இவன் ஒரு நாக அரசன் என்பதை இவன் பெயரில் இருந்தே புரிந்துகொள்ளலாம். இவ்வரசன் ஆறு வரு

[7ம் பக்கம் பார்க்க]

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

இம்மன்னனைத் துட்டகைமுனு என்றும் அழைப்பார்கள் உண்மையான சிறந்த வீரர்களைச் சிங்களவர்கள் துட்டகைமுனுவாக கற்பனை செய்து பார்க்கும் பழக்கம். இம்மன்னனின் ஆட்சிகாலத்திற்குப் பின்பே ஏற்பட்டது.

ஒருமுறை இவன் தலையிலே கைவைத்துக்கொண்டிருந்த போது, இவனது தாயாரான விகாரமாதேவியார் இவனருகே வந்து "என்னமகனே! தலையிலே கை வைத்து இடிந்தவன்போல் துக்கத்துடன் இருக்கிறாய்?" என்று கேட்டாளாம் அதற்கு இம்மன்னன், "தெற்கே கடல்! வடக்கே தமிழர்கள்! இதனிடையில் எப்படியம்மா நான் துக்கமில்லாமல் நிந்து, தந்திரமாக அவனை அணுகி, "இவ்வளவு பெரும் படை மோதி, பல்லாயிரம் பேர் அழிவதைவிட.... நீயும் நானும் மட்டும்மோதி வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கலாம் வருகிறாயா? - என்று கேட்டானும் அதற்கு எல்லாளன் "சரி" என்றான்.

போர் மூண்டது. இரு மன்னர்களும் யானைகளில் ஏறிப் போர் புரிந்தனர். துட்டகைமுனுவின் பட்டத்து யானையின் பெயர் 'கந்துல' என்பதாகும். யானையில் ஏறி போர் புரிந்த எல்லாளனின் யானையை ஒழித்திருந்து ஒரு சிங்கள வீரன் அம்பு எறிந்து கொல்ல, யானையின்றி நின்று போர் புரிந்தவனை துட்டகை

---

# ஆத்ம ஜோதி அணைவதில்லை

நாகமணி முத்தையா என்ற ஓர் அழகிய உருவம், கனடாவில் 8-9-95 வெள்ளிக்கிழமை மறைந்துவிட்டது. ஆனால் அவரது அன்பு மயமான திவ்விய ஆத்ம ஜோதி நமது உள்ளங்களிலும், இல்லங்களிலும், கோவில்களிலும், வீதிகளிலும் என்றும் ஒளி தரும். ஆத்மஜோதி முத்தையா என்ற பெயர் நமது நாட்டின் ஆத்மீக தலைவர்கள் வரிசையில் சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்டது. திரு. நா. முத்தையா அவர்களின் வாழ்க்கை மகான்களோடு சம்பந்தப்பட்டது. அவர்களிடம் பெறத்தக்கவைகளைப் பெற்றவர் அவர் என்று வாழ்த்தினர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள். அந்த மகான்களின் பெயர்களுடன் முத்தையா சேர்ந்துவிட்டார்.

ஆத்மஜோதி, அன்புமணி முத்தையா 'மாஸ்ரர்' அவர்களுடைய பேச்சை இனி கேட்க முடியாது; பாதயாத்திரையைப் பார்க்க முடியாது. ஆனால் அவரின் ஆத்மீக நூல்கள் உண்டு. அவர் விட்டுச்சென்ற வேலைகள்

'நந்தி'

உண்டு, அவர் காட்டிய பாதை தெரியும். இவற்றைப் பயன்படுத்துவதும் பின்பற்றுவதும் இந்துசமய மக்களின் கடமையாகும்.

ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வாழ்க்கை வரலாறு மிக விரைவில் வெளிவரவேண்டும். அந்த வரலாறு அவரின் இளம் பருவத்தில் ஆத்மீக சிந்தனை மூளை கொள்ள இருந்த சூழல், ஆசிரிய பணி, ஆசிரிய சங்கத் தொண்டு, மலையக வாழ்வும் பணியும், ஆத்மஜோதி சஞ்சிகை வெளியீடு, சமய-தமிழ்த் தொண்டு, எழுதிய நூல்கள், வெளிநாட்டுப் பிரயாணம், மகான்களுடன் தொடர்பும் தரிசிப்பும், அவரைப் பற்றி சமய பெரியோரின் கருத்துக்கள் ஆகியன இடம்பெறவேண்டும்.

ஆத்மஜோதி மாஸ்ரரின் மலைநாட்டுப் பணி பற்றிய விபரம் மலையகச் சகோதரர்களுக்கும் நமக்கும் இடையே ஒரு சங்கிலியாக அமையும். அவர் மலையக சிறுர்களை நேசித்த அன்பை நான் நேரிலே உணரும் பாக்கியம்

[7-ம் பக்கம் பார்க்க]

சிறு கதை

# அந்த நாள் வந்தது

ந. கிருஷ்ணசிங்கம்

காற்று தூசியோடு மண்ணையும் தூக்கி வீசியது. கடையின் கதவை ஒருக்கணித்து சாத்தி...கல்லொன்றை அணைத்துவிட்டு, தையல் இயந்திரத்தின் மூடியைத் திறந்து...எண்ணையை வேண்டிய இடங்களுக்கு இட்டு, துடைத்து துப்பரவு செய்து, நாசி நிறைய நறுமணத்தை நுகரும்படியான அகர்பத்தியைக் கொழுத்தி வைத்து, கண்மூடித் தியானித்துவிட்டு. தொழிலைத் தொடங்கினாள் வதனி.

கன்னங்கள் சற்று கீழிறங்கி தாடையை நோக்க, கருவட்டக் குழிகளுள் கண்கள் துலங்க, அவற்றை மூடி மூக்குக் கண்ணாடி விளங்க, நீறணிந்த நெற்றியின் மேல் கருமையோடு வெண்மை இழந்த கூந்தல் நெளிய வயதுக்கு மீறிய முதுமையோடு வதனி இருந்தாள்.

சுறுசுறுப்பாக கால்கள் இயங்க...தையல் இயந்திரத்தின் ஊசி ஏறி இறங்க... ஊர்ந்து வெளிவரும் துணியில் அவளின் கைவண்ணம் கண்திறக்கும்! நெடுநாள் அனுபவமும், நுட்பமான தேடலும், கலை உணர்வும், அவளின் தொழிலுக்கு கிராக்கியை ஏற்படுத்தின. வதனியின் தையற்கடை அந்த வட்டத்தில் பிரபலமானது.

அவளிடம் தொழில் பழகவென பலரும் வருவதுண்டு. ஆனால் அவளின் கண்டிப்பிற்கு முன் நின்றுபிடிப்பவர் அருமை. தன்னைக் காத்துக் கொள்ள அவள் ஏற்படுத்திக் கொண்ட இறுக்கம் சிலருக்கு இடைஞ்சலாகப்பட்டது.

''மணக்கொடைத் தடைச் சட்டம் அமுல்...'' என்று தலைப்பை வாசித்து, செய்தித்தாளுள் விழி எறிந்து மேய்ந்து...விமர்சித்த சிறுமிகளின் குரல் வதனியின் உதட்டில் மென்னகையை மலர்ந்த, மனமோ.. மீளலை வீசும் கடலாகிக் கனத்தது. எரிசுடர்த்திய நினைவுகள் எழவே, சற்று நேரம் கண்ணை மூடியபடி, வதனி உள்மூச்சை ஊன்றி இழுத்து வெளிவிவிட்டு...அந்த நாளை இரை மீட்கத் துணிந்தாள்.

''எடியே! சாலம் விட்டு என்னை ஏமாத்தினது காணும். எடி, கலியாணம் முடிச்சு மூண்டு மாசம் போயும்... கொப்பனுக்கு மிச்சச் சீதனக் காசைத் தர மனமில்லை என்ன! ஆரையடி ஏமாத்திறியள்? இண்டைக்கு ரெண்டிலை ஒண்டு காணமல் விடன், போடி போய் காசு ஒரு லெச்சத்தோடை திரும்பி வா! நிண்டியோ கொலை விழும்.... முழிஞ்சு மருட்டினது காணும், போடி வெளியாலை!''

வாய்ப்பேச்சோடு கைவீச்சும் கலந்து உருவேறிய சூரனாக கனகன் கலையாடினான்! சிவந்த கண்களும் விரிந்த மூக்கும்...வியர்த்த உடலுமாய் நின்றவன், விதம் விதமாய் அவளைப் பதம் பார்த்தான்.

''ஐயோ! உங்களைக் கும்பிட்டேன். அடியாதையுங்கோ... என்னைக் கொன்றுபோடாதையுங்கோ! கொஞ்சம்பொறுங்க, அப்பா தருவார்! நான்தானே வீட்டிலை கடைசி...எல்லாம் எனக்குத்தானே! அடிக்காதையுங்கோ நான் காசை வாங்கித் தாறன்......''

வதனியின் அலறல் அயலைத் திரட்டியது.. ஏக்கம் கௌவிய தொனி வீச்சினல் வீதியில் சென்றோரும் நின்றனர். வேலிப் பொட்டுகள் வேடிக்கைபார்த்தன. பலரும் பலவாறு பேசிக்கொண்டனர். மோகம் தணிந்த வேகம் விமர்சிக்கப்பட்டது.

''மசாலக்காறி! புரியன் அடிச்சால் இப்படியே கத்திறது. ஒப்புச்சொல்லி ஊரைத் திரட்டிப்போட்டாள்! உன்னை வெட்டிப்போடவேணும்!''

மகனுக்கு உருவேற்றும் விதத்தில் தாயின் குரல் ஓங்கியது, விலக்குப் பிடித்தோரை விட்டுத் துரத்தியவன்.. படுதூசணத்தால் பலரையும் ஏசினான், முற்றம் வெளித்தது!... தலைகுனிந்தபடி தம்வழியே வந்தவர் போயினர்.

வீட்டறைக்குள் வலுக்கட்டாயமாக வதனியை இழுத்துச் சென்றவன், அவளை அடித்து விழுத்தி. .காலால் மிதித்து, கழுத்தை நெரித்து, இடைச்சேலையை இழுத்து உரித்து... அம்மணமாக்கி...... தோல்பட்டியால் தளும்பேறத் தாக்கி...குரூரமாகக் குதறி முடித்தபின்...வெளியேறி நடந்தான்.

நினைவு தெளிந்து விழித்தவள்...மான உணர்வினல் மளமளவென்று சேலையைச் சுற்றிக்கொண்டு...தள்ளாடி நடந்து சென்று தாய்வீடு சேர்ந்தாள்!

செவ்வுடலில் தோலுரிய அடித்து அனுப்பிய அசுரனை எண்ணி, மண்வாரி இறைத்தாள் தாய். நெஞ்சிலே குத்தி நெடுமூச்செறிந்தார் தந்தை. அதர்மத்துக்கு எதிராக எழுந்து போராட முடியாதவர்களாய் பெண்ணைப் பெற்ற அவர்கள் அடங்கிப்போனார்கள்.

நெஞ்சோடு அவர்கள் சில நாள் பேசினர். தமக்குள் பொருமி அழுது கண்களைத் துடைத்தனர். அகத்தே வழிந்த துயரச் சுரப்பு அடங்கிப்போனது. உட்கனன்ற கொதிநிலை குறைந்து வரவே பொறுப்பின் சுமை பெரிதாய் கனத்தது! வாழா வெட்டியாய் மகளைக் காண மனம் கூசியது. கடைசியில் கணவனோடு அவளைச் சேர்த்துவிடும் அலுவலில் அவர்கள் இறங்கினர்.

''இனி என்ன பிள்ளை செய்கிறது! பொம்பிளைப் பகுதி கொஞ்சம் பொறுமையாகத்தான் போகவேணும். அவங்கள் வெயாங்கொடைக் கடையிலிருந்து என்னைக் கலைச்சிராட்டி... உது ஒரு காசில்லை எனக்கு. பாப்பம்...கெதிப்பண்ணி மிச்சக் காசையும் தாறன் நாமெல்லோ மருமோனுடை கதைக்கிறன்...சரி நீ வெளிக்கிட்டுவா பிள்ளை! என்ன யோசிக்கிறு...?'' என்றபடி தந்தையார் மகளைத் தயவோடு நோக்கினார்.

அவளின் குருதித் துளி ஒவ்வொன்றும் கோபத்தால் துடித்தன. கொதிநிலையின் உச்சத்தைத் தொட்ட வதனி விழி சிவக்க பெற்றவர்களைப் பார்வையால் சுட்டாள். கோவையற்ற வார்த்தைகளை அங்கே கொட்டினாள்! இறுதியில் தன்னைத் தெளிய வைத்தவள் திடமோடு கூறினாள்.

''அப்பா! இனி நான் எவருக்கும் சுமையாக வாழ மாட்டன். எனக்கு வாழவழி தெரியும்! கலியாணம் ஒன்று நடந்தது எண்டதை கெட்ட கனவாக நான் மறந்திட்ட...ன்''

அடுத்த நிமிடமே அவளின் இருண்டவானில் நம்பிக்கை நட்சத்திரம் முளைகொண்டு வளர்ந்தது. தனது நகைகளை சட்டபூர்வமாக மீட்டெடுத்தாள். கலியாண பந்தத்திலிருந்து விடுபட்டு நிமிர்ந்தாள். வீட்டின் முன்வேலி பிரிந்தது; சிறிய தையல்கடை சிரம்தூக்கி எழுந்தது.

பெண் உரிமையின் குரல்வளை இறுக்கப்பட்டிருந்த காலகட்டத்தில்... வதனியின் இப்போக்கு பலருக்குப் பிடிக்கவில்லை. வெறும் வாய்கள் மென்று ஒய்ந்தன! எதையும் ஒரு பொருட்டெனப் பேணுதவள்... காலத்தை விழுங்கிய வண்ணம் தன் காரியத்தில் கண்ணுயிருந்தாள்.

தந்தையின் மறைவு... கறைபிடித்தது துன்புறுத்திய கணவனின் மறுமணம்... என்றெல்லாம் நிகழ்வுகள் நடந்தன. ''வாழாவெட்டி.. வாழாவெட்டி..'' என வசைபாடியவர்கூட ''இவள் பெட்டை வதனியைப்போலை பெண்டுகள் துணிவாக இருக்க வேணும்'' என்று புகழ்பாடப் புறப்பட்டனர்.

வேகமாய் பறந்து வந்து குண்டு வீசிய விமானங்கள் உடைந்து தகர்ந்து உதிரியாய் வீழ்ந்தன.விடுதலைப்படையணி வளர்ந்து வளர்ந்து வானைத் தொட்டது! வரலாற்றில் நிகழாதபல நிகழ்ந்து முடிந்தன. சிரசைச்சிலுப்பியபடி சென்று மறையும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உச்சச் செய்தியை உரைத்தன.

[7-ம் பக்கம் பார்க்க]

# கவிமலர்

## புல்லுருவிகளுக்கும் புல்லர் படைக்குமாய் வாள் உருவி நிற்கிறோம்; வருக!

நாகபாம்புக்கு பால்வார்க்க
நச்சுப் பற்களுடன்...
அது நாக்கை நீட்டியது.
வளர்த்த கடா மார்பில் பாயக்கண்டு
அடுத்த வளவுச் சேவல்...
எக்காளமிட்டுச் சிரித்தது.
ஓடிவந்து அணைக்க வேண்டிய
உறவுகளில்ச் சில...
கூடியிருந்து குறிபறிக்க அவாவி நின்றன.
அடிவருடிகளாய் இருந்த நாய்கள்
அடுத்தவன் போடும் எலும்புக்காய் காத்திருந்தன
சொல்லிக் கொடுத்து சல்லி சேர்க்கும் பேடிகளாய்
உள்ளிருந்தே ஊறுசெய்தன பேய்கள்
தாய்மரத்தின் மேனியைத் தீண்ட
துணைபோயின கோடரிக் காம்புகள்
கருப்பை சுமந்த வயிறு
நெருப்பைக் கக்கிய போது நினைத்தழுதிருக்கும்
பெற்ற பிள்ளையின் துரோகத் தனத்தையெண்ணி
உருகி உருகி கண்ணீர் வடித்திருக்கும்.
கருகிப் போகையிலும் ''துரோகி'' என்றே
குளறியிருக்கும்
''மாபாவி'' உன்னை மன்னிக்காது இம்மண்
''சாவாகிப் போவாய்'' என்ற படி
ஆவிபிரிந்திருக்கும்; அவ்வுயிர்

ஃ ஃ ஃ

பில்லி சூனியம்......
மந்திரம் தந்திரம் என்றேதோ
சொல்லிப் பிதற்றுகிறது சிங்களப் பிசாசு
''கடலைக் கலக்கி குடித்தொழிப்பேன்'' என்றபடி
கங்கணம் கட்டி நின்று குரைக்கிறது
''ஆணவ நாய்''
பிடிவாதக் கழுகொன்று
மது மயக்கத்தில் நின்று மல்லாடுகிறது
சொல்வதெல்லாம் சுத்தப்பொய்
அர்த்தமில்லா அனர்த்த வார்த்தைகளை வீசி
பம்மாத்து வித்தை காட்டி பல்லிழிக்கிறது; அது
''நரவேட்டைக்கு பாசக்கயிற்றோடு
எருமைக் கடாக்கள் தயார் நிலையிலாம்''
உரத்த குரலால் உலகம் அதிர்கிறது
மனச்சாட்சி மரணித்த பின்வந்து
''மனித உரிமை'' பற்றி பேசுவோற்கு இனி
மார்படைக்கும்
உயிர்ப்பலி எடுப்பில் உலக சாதனையாளர்கள்;
இம்மண்ணின் ஆக்கிரமிப்பாளர்கள்!
புயல் எழும்பமுன் உலகம் புருவம் உயர்த்தாதா...
அயல்நாட்டின் அட்டூழியங்களை அளவெடுக்க?
உலகமே
''நவாலி நரபலி''யை ஞாபகத்தில் குறித்துக்கொள்
''சாவாக்கி தமிழர் பிணம்மேலே
சவாரிவிட நினைத்து யார்வரினும்
''அவர்தம் சவக்குழி'' நிறைந்த பூமியாய்
இம்மண் காட்சி தரும்''
சவால் விடுத்தான் புலிகள் தளபதி!
வையகமே இதையும் நினைவில் வைத்துக்கொள்!
புல்லுருவிகளுக்காய் வாள் உருவி நிற்கின்றோம்.
புல்லர் படைகளின் தொகையைச் சொல்லச்சொல்;
புதைகுழிகள் தோண்டி வைப்பதற்காய்...!
வெற்றி நமதே ஏற்பீர் ஜெகத்தீரே!

— வேலணையூர் சுரேஷ்

# கனடாவில் எல்லா தமிழர் கடைகளிலும் தேசியத் தலைவர் பிரபாகரனின் படம் தொங்க விடப்பட்டுள்ளது

## அட்லாண்டாவிலிருந்து ரணசிங்க

கனடாவில் உள்ளஎல்லா தமிழ்க் கடைகளிலும் தலைவர் பிரபாவின் படம் முகப்பில் தொங்கவிடப்பட்டிருப்பதை நாங்கள் பார்த்தோம் என்று ஜோர்ஜியா அட்லாண்டாவில் இருந்து ஆர், டிக்சன் பி. ரணசிங்கா என்பவர் 'ராவய' பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

கனடாவில் தமிழர்கள் வாழும் நிலையைக் கண்டு, தன் மன உளைச்சலை அந்தக் கட்டுரையில் விபரித்திருக்கிறார்.

தமிழர்களில் அங்குள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினர் மிகக் கூடுதலாக கருணை காட்டுவதால். அவர்கள் பிரசாரங்களை மேற்கொள்ள முடிகிறது. எங்களது தூதுவராலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிகாரிகள் அக்கறை காட்டாது இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளை மாத்திரம் செய்துவிட்டு பேசாமல் இருந்து விடுகிறார்கள். அவர்கள் நாட்டுக்கு புகழ் கிடைத்தாலும் அல்லது அபகீர்த்தி கிடைத்தாலும் அவர்களைப் பொறுத்தளவில் எல்லாம் ஒன்றுதான்.

இதுவரை காலமும் யுத்தத்தை ஆயுத வியாபாரிகளும் கடத்தல்காரர்களும் தான் விரும்பிக்கொண்டிருந்தனர். இவர்களைவிட இன்னொரு வகையினரும் இருக்கிறார்கள்.

கனடாவில் உள்ள தமிழர்கள் யுத்தம் நிறுத்தப்பட்டால், தாங்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுவிடுவார்களோஎன்றஎண்ணத்தில் வாழ்கிறார்கள் இங்கு பணம் சேர்ப்பதுபோன்று இலங்கைக்கு போனல் பணம் தேடலாமா என்ற கருத்தில் செயல்பட்டு வருகின்றார்கள்? யுத்தத்தில் யாரும் இறந்தால்அதைப் பற்றி கவலை இல்லை இவர்களுக்கு.

இவர்கள் எந்தவித தொந்தரவும் இல்லாமல் பாஸ்போட் இல்லாது காலை,மாலை வேளைகளில் வன்கூவர் பக்கம் சென்று அமெரிக்காவுக்குள் நுழையமுடியும். அங்கு பாஸ்போட் தொலைந்து விட்டது என்று அறிக்கை சமர்ப்பித்து பாஸ்போட் பெற்றுக் கொள்கின்றார்கள்.

இலங்கையில் இருந்து தாங்கள் விரும்பிய நபர்களை கனடாவுக்குள் எடுப்பதிலும் கனடா தமிழர்கள் கஷ்டத்தை எதிர்நோச்கவேண்டியதில்லை. கனடாவில் உள்ள தமிழர் ஒருவர் இலங்கைக்கு வந்து திரும்பும்போது தனது மனைவியின் பாஸ்போட்டில் வேறொரு பெண்ணை அழைத்துச் செல்கிறார் இதற்குரிய ஆவணங்கள் கொழும்பில் பெற்றுக் கொள்கின்றார்கள். என்றார். -ம

ஆதாரம் 'ராவய'

# சீனமாநாட்டில் தமிழர்களின் பிரச்னை பற்றி

# பல அரங்குகளில் பிரஸ்தாபித்தோம்

## -கோகிலா மகேந்திரன் பேட்டி

பிரபல எழுத்தாளரும் பாடசாலை அதிபருமான திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் அண்மையில் சீனுவில் நடைபெற்ற அனைத்துலக பெண்கள் மகாநாட்டுக்காகச் சென்றிருந்தார். தற்போதைய சீனு பற்றிய நிலைமைகளையும் மாநாட்டில் என்ன நடைபெற்றன என்று அறியும் பொருட்டு அவரை சந்திக்கச் சென்றேன். அவர் சீனு பற்றி விபரித்த கருத்துக்களை கேள்வி பதில் வடிவில் தருகின்றோம்.

கேள்வி: சீனுவில் உள்ள பீஜ்ஜிங் நகரில் நடைபெற்ற அனைத்துலக பெண்கள் மகாநாட்டில் எமது பிரச்னையை பற்றி ஏதாவது பிரஸ்தாபிக்கப்பட்டதா?

பதில்: அந்த மகாநாட்டில் சமாதானத்துக்கான நிறைய கருத்தரங்குகள் இடம் பெற்றன. அந்த மகாநாட்டில் இலங்கை அரசு தமிழ்மக்களுக்கு என்ன மாதிரி கஷ்டங்களைக் கொடுத்து வருகின்றது என்பதை விபரித்தோம், நாங்கள் உலகத்தோடு தொடர்பு கொள்ளமுடியாமல் இருக்கிறது பற்றியும்மக்கள்மீது ஏவப்பட்டிருக்கின்ற கொடுமைகள் பற்றியும் அங்கு நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம் அங்கு வந்த பெண்கள் சிலருக்கு எமது பிரச்னை தெரியாது இருந்தது அவர்கள் ஒரு சிறிய போராளிக்குழு ஒன்று அரசுடன் மோதுவது என்றுதான் எண்ணிக்கொள்கிறார்கள். ஒரு இனம் ஒன்று இதற்குள் நசுங்குகிறது பற்றி அவர்களுக்கு நாங்கள் எடுத்துச் சொன்னோம். அதன் பின்புதான் எங்களுடைய பிரச்னை பற்றி அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

மாநாட்டுக்கு வந்த சிங்கள பெண்மணிகளில் அநேகர் எமது பிரச்னையை ஏற்றுக் கொண்டார்கள். 40 சிங்களப் பெண்மணிகளில் 35 பேர் இதற்கு ஆதரவாகப் பேசிக் கொண்டார்கள்.

கே: சீனுவின் இன்றைய நிலைமைகள் பற்றி கூறுவீர்களா?

ப: அங்குள்ள அரசியல் நிலைமைகளைப் பார்க்கக் கூடியதாக இருக்கவில்லை. கால அவகாசம் காணுதிருந்தது. சீனப் பெருமதில், பழைய புத்த கோயில், ஒரு பெரிய குளம் போன்றவற்றைப் பார்த்தோம்.

மாநாடு 'கெய்ரோ' என்ற இடத்தில்தான் இடம் பெற்றது. இந்த மகாநாடு நடப்பதற்காக அங்கு வாழ்ந்த வருமானம் குறைந்த மக்களை அப்புறப்படுத்திஞர்கள் என்று வதந்தி நிலவியது.

உண்மையிலே 'கெய்ரோ' நகரம் மிகவும் அழகாக இருந்தது.

சீனு மக்கள் தங்கள் சொல்லப்பட்ட கடமைகளை கண்ணும் கருத்தோடு செய்வார்கள். அதற்கு மேற்கொண்டு எந்த வேலையும், அவர்களைக் கொண்டு செய்விக்க முடியாது.

காசு கொடுத்து அலுவல் பார்ப்பது, லஞ்சம் போன்றவை சீனுவில் கிடையாது. சீனமக்கள் ஓடித்திருந்து டாம்பீகமான வாழ்க்கை வாழ்வதைக்கூட நாம் காணவில்லை அநேகமானவர்கள் வேலைக்குப் போகும் போது சைக்கிளில் தான் பிரயாணத்தை மேற்கொள்கிருர்கள்.

சீனுவில் பெரிய அளவு பணக்கார வாழ்க்கை இல்லை. ஒவ்வொரு வேலைக்கும் யூனிபோம் இருக்கிறது. தேவையில்லாமல் பொது இடங்களிலும், அலுவலகங்களிலும் கதைப்பது, சும்மா அரட்டை அடிப்பது என்பது சீன மக்களிடம் இல்லை.

கே: மகாநாட்டில் பிரதானமாக என்னென்ன தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன?



ப: பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆணுதிக்கம், ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம சம்பளம், அரசியலில், தலைமைத்துவத்தில் பெண்களின் பங்கு பற்றி ஆராயப்பட்டது.

போர் நடக்கும் நாடுகளில் பெண்கள் உளவளத் துணை வழங்குவது பற்றியும் பேசப்பட்டது. பெண்களின் உரிமைகளைக் கலைகளுடாக, சேர்க்கஸ் போன்றவற்ருல் பிரசாசத்தை மேற்கொள்ளலாம் என்று பல அரங்குகளில் தெரியப்படுத்தப்பட்டது. எமது பிரச்னையையும் இந்த வழியில் மேற்கொள்ளலாம் என்பது எனது எண்ணமாகும்.

கேள்வி;- அங்கு உணவு வகைகள் எப்படி அமைந்திருந்தன?

பதில்:- அங்கு பல பேர் சோற்றுடன் சைவக்கறிகள் தான் சாப்பிட்டார்கள். பாம்பு, தவளை போன்றவை பரிமாறப்படுமோ என்ற பயத்தில் தான் அசைவ உணவில் எவரும் நாட்டம் கொள்ளவில்லை. ஒரு மத்தியான சோற்றுப் பார்சல் சீனுவில் 130 ரூபா பெறுமதி கொண்டது.

கேள்வி:- நீங்கள் ஒரு எழுத்தாளர். மாநாட்டில் இலக்கிய முயற்சிகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது?

பதில்:- உலகப்பெண் எழுத்தாளர்களும் பங்குபற்றிஞர்கள். தென்கிழக்காசிய, இந்திய எழுத்தாளர்களும் கலை இலக்கிய கருத்தரங்குகளில் பங்குபற்றிஞர்கள். சில பேர் தங்கள் நாட்டுப் படைப்புகளை மாநாட்டுக்குச் சமர்ப்பித்திருந்தார்கள், அந்த ஏற்பாடு எங்களுக்கு தெரியாது இருந்ததிஞல் நாங்கள் அந்த வாய்ப்பை இழந்தோம். ஒரு ஆபிரிக்கப் பெண் எழுத்தாளர் தங்களது ஆதிவாசிகள் நடனத்துக்கும் எமது காத்தவராயன் கூத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. இதுபற்றி ஆராய்வதற்கு இலங்கை வருவதாகக் கூறியுள்ளார்.

கேள்வி:- சீனு ஒரு கம்யூனிச நாடு. தற்பொழுது அங்கு என்ன மாதிரி மக்கள் வாழ்கிருர்கள்?

பதில்:- நகரத்தில் மிகப் பிரமாண்டமான 'சுப்பர் மார்க்கட்' இருக்கிறது. ஒரே இடத்தில் எல்லாப் பொருட்களையும் பெறலாம். ஓரளவுக்கு மேலைநாட்டு டாம்பீகத் தன்மை அங்கு ஊடுருவியது போல் தெரிகிறது.

சந்திப்பு:

மணிசேகரன்

சீன இளைஞர்களில் பலர் கடவுள் நம்பிக்கையற்று இருக்கிருர்கள். அவர்கள் கடவுளை விட ஒழுக்கக் கோட்பாட்டைத்தான் நம்புகிருர்கள். வயது போனவர்கள் தான் கோவிலுக்குச் செல்கின்ருர்கள். கோவில்களை அங்கு ஒரு உல்லாச இடமாகத்தான் பயன்படுத்துகிருர்கள்.

கேள்வி:- இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

பதில்: 187 நாடுகளைச் சேர்ந்த 30,000 பெண்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றிஞர்கள். பல நாட்டுப் பெண்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. பல கருத்தரங்குகளால் நாம் பல நன்மைகளைப் பெற்ருேம்.

# சர்வதேசியம் வருடத்தில் ஒரு லட்சங்கோடி டாலர்களை போர்த்தளபாடங்களுக்கு செலவழிக்கின்றது

உலகத்தில் 80 கோடி மக்கள் வறுமையில் வாடுகின்ற போதும்; 77 கோடி மக்கள் சுறுசுறுப்பாக வேலை செய்து வாழ்வதற்கு போதிய உணவில்லாமல் இருக்கும் போதும், பத்துக்கோடி மக்கள் தங்கும் இடமின்றி அலையும் போதும்; 130 கோடி மக்கள் சுத்தமான குடிநீர் இன்றி வாழும் போதும் ஒரு கோடி நாற்பது லட்சம் குழந்தைகள் பசியின் கொடுமையால் ஒவ்வொரு வருடமும் இறக்கின்ற போதும், உலக நாடுகள் ஒருலட்சம் கோடி டாலர்களை வருடாவருடம் போர் தளபாடங்களுக்கு செலவழித்து வருவதாக, யுனெஸ்கோ வெளியிட்ட தரவொன்று தெரிவிக்கின்றது.

இதற்கான காரணம் இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த பின்னர் உலகில் நூற்றி இருபது போர்களை ஆயுத வியாபாரிகள் தூண்டி நடாத்தியுள்ளனர். அவர்கள் தமது போர்க்கருவிகளை மிகவும் திறம்பட்ட வகையில் உபயோகிக்க உலக நாடுகளின் படைகளை பயிற்றுவித்துள்ளனர். மனிதக் குடும்பத்தை அழிக்கவும், பூமியைக் குடியிருப்பாரற்ற கோளமாக மாற்றவும் சக்தி கொண்ட அணு ஆயுதங்களை சேமித்து வைக்கவும் அவர்கள் உதவியுள்ளனர். அவர்கள் எதற்கும் அஞ்சாது ''உங்கள் மரணம் எங்கள் இலாபம்' என்பதாகவே கருதுகின்றனர்,

போர்த் தளபாடங்களை உற்பத்தி செய்வதில் இன்று இரண்டு வல்லரசுகள் முதன்மை பெறுகின்றன. பிராண்சு, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய ஆயுத விற்பனையாளர்கள். கிரிஸ், ஸ்பெ

(7ம் பக்கம் பார்க்க)

## வாசகர் பேனையிலிருந்து

### "வாசகரை வசமாக்கும் வாரமலர்"

மகிழ்ச்சியுற மணியான கட்டுரைகள்
கதைகள் கவிதைகள் கட்டிவர
கவர்ச்சி கண்டு நெருக்கமுற்ருேம்
கட்டழகி வாரமலர் ஈழநாடே
வளர்ச்சியின் வாசனையால் வாசகரை
வசமாக்கும் வாசமலரே
புகழ்ச்சி பெற்று பொலிவுடனே
புவியதனில் வாழ்க பல்லாண்டு.

க' அருமைநாயகம்
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

## பெண்கள் உலகம்

# மிதிக்காதே மதி!

# ஒதுக்காதே அங்கீகரி!

சமீபகாலங்களில் பெண்கள் வேலைக்குச் செல்வது என்பது சராசரியான விஷயமாகிவிட்டது. ஏறத்தாழ எல்லாவீடுகளிலும் பெண்கள் வேலைக்குபோவது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட, சில குடும்பங்களில் ஒரு பொருளாதாரக் கட்டாயமாகக் கூட ஆகியிருக்கிறது.

கலைஞர் கருணுநிதியின் மகள்கனிமொழி 'இந்து' பத்திரிகையில் பணியாற்றுகிருர். பெண்கள் சம்பந்தமாக புதிய புதிய விடயங்களை யோசித்து எழுதிவருகின்ருர். இதில் ஒரு பகுதி.

பெண் வேலைக்குப்போவதை இலேசான புகைச்சலோடு ஏற்றுக்கொள்ளும் இந்தச் சமூகம், வேலை பார்க்கும் இடத்தில் அவளை ஆணுக்கு சரிநிகராக நினைக்கத் தயாராய் இல்லை.

ஆண்களையும் பெண்களையும் ஒப்பிட்டுப்பார்ப்பது ஆரோக்கியமான மனிதர் ஒருவருக்கும் சங்கிலியால் பிணைக்கப்பட்ட இரும்புக் குண்டை காலில்கட்டி முடக்கப்பட்டவருக்கும் ஓட்டப்பந்தயப் போட்டி வைத்து, பின் தள்ளியவரை குறை கூறுவதுபோலாகும்.

பல நூற்ருண்டுகாலமாக ஒதுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகம்எழ முற்படுகையில் ஆதரவுக்கரம் நீட்டி, அரவணைக்கும் சமூகமும் சட்டங்களும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நசுக்கப்பட்ட பெண்ணினத்தின் மீது ஏன் ஏளனக்கணை வீசுகிறது.

ஆணுக்கு உத்தியோகம் மட்டும்தான் புருஷலட்சனம் அவனிடம் எதிர்பார்க்கப்படுவது சம்பாத்தியம், அலு

(7ம் பக்கம் பார்க்க)

பாவியுங்கள்

அண்ணு பற்பொடி

(ஏ-5323)

## அந்தநாள்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

நெஞ்சத்தில் மூண்ட நெருப்புக் கதிரின் வேர் பிடுங்கப்பட்ட இந்த நாள் வதனியை நிமிரவைத்தது! காலா காலமாக இரெத்த பாணம் அருந்தி; நெடிமீச நின்று சிரித்த சீதன அரக்கனை உதைத்து வீழ்த்தி... மூக்கை உடைத்து... முழிகளைச் கிழித்து... பற்களைப்பிடுங்கி... செருப்புகளால் எறிந்து கலைதது ஓடஓட விரட்டி ஒழிந்து... வேலிகளை அடைத்து வெடிகுண்டுகள் தாட்டு... பாதுகாப்பு அரண் அமைத்து வைத்த தலைவனின் படததை இமை கொட்டாது நெடுநேரம்பார்ததபடி இருந்த வதனியின் அமைதி வாசலில் வந்து நின்ற இளம் பெண்ணால் கெட்டது.

''அம்மா! மன்னிக்க வேணும். என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனுல்...... உங்களை எனக்கு நெடுநாளாக தெரியும்...''

புதிர் போட்டகதையோடு.. போராளி உடையோடு... பதினைந்து வயது மதிக்கத்தக்க பெண்... பிஞ்சுப்புன்னகை பூத்தபடி எதிரே நிற்பது வதனிக்கு வியப்பைக் கொடுக்கவே

''வாரும் பிள்ளை! இரும் இதிலை, என்ன சொன்னனீர்...?'' என்று கேட்டாள்.

''உங்களோடை எனக்குக் கதைக்க ஆசை... உறவை வளர்க்க விருப்பம்...''

''நீண்ட நாள் ஏக்கத்தை நிறைவு செய்ய நான் நாள் ஒண்டை பார்த்திருந்தேன்... அந்த நாள்தான் இந்நாள்...''

கன்னங்குளிய... முல்லைப்பற்கள் முறுவலிக்க, வந்த கதிரையில் இருந்தபடி, தோளில் முட்டிய கூந்தலைச் சிலுப்பிய சிறிய பெண்ணை வியப்பு வடியாத முகத்தோடு வதனி பார்த்தபடி இருந்தாள்.

''அம்மா! சீதனக் கொடுமையால் சிதறுண்டு போன உங்களின் வாழ்க்கைக் கதை எனக்கு வடிவாத் தெரியும்! உங்களைக் கடந்து போகும் நேரமெல்லாம் என்ர நெஞ்சு கனக்கும். நிற்கதியாய் நிற்கும் உங்களைத் தாங்கிப் பிடிக்க என்ர கைகள் துடிக்கும்! ஆனுல், அது இயலாதது என்று மனம் சொல்லும் இன்று அது கைகூடப் போகிறது...''

''இதென்ன இந்தப் பிள்ளைக்கு ஏதும் மூளை பழுதோ?... எப்பிடி என்னைப் பற்றி இதுக்குத் தெரியும்? நீண்ட நாள் ஏக்கம்...உறவை விளக்க ஆசை...இதென்ன கதைகள்...?''

தனக்குள் புழுங்கியபடி வதனி, நிதானத்தை வரவழைததுக்கொண்டு... உதட்டில் புன்னகையைப் பூக்கவிட்டபடி ''ஆர் பிள்ளை நீ? என்னைப் பற்றி என்னெண்டு தெரியும்..ஒழிப்பு மறைப்பின்றி உள்ளதைச் சொல்லன் பிள்ளை'' என்று வினவி ஆர்வத்தோடு அந்த சிவந்த முகத்தை ஆழமாக நோக்கினுள்.

நிரவத்துடித்த இடைவெளிமைய நிரவி ..நெஞ்சிலே குழிந்த பள்ளத்தை மேடு நிமிர்த்தி ..உறவு ஒளிரும் மின்னுயிர்ப்பை உடலெங்கும் ஓடவிட்டு.....மந்திரக்குரல் அதிர அவள் தனது சிறு வாயை திறந்து,

''அம்மா! என்ரை பேர் கவிதா, உங்களைக் கட்டி பிறகு கலைச்சுவிட்ட கனகுவின்ரை மகள் நான்...''

காக்கையின் இறக்கைகள் போல் கண்மடல்கள்துடிக்க... ஆர்வப்பெருக்காய் ஆவென்ற வாயோடு நோக்கிய கவிதா மீண்டும் சிரிப்போடு...

''அம்மா! என்னை உன்ரை மகளாக ஏற்க வேணும்... சரியே?'' என்று உரிமை விஞ்சக்கேட்டு, உளமார இரசித்தாள்.

உள்ளக் கிளர்த்தலால் உடல் சிலிர்க்க...பெருகி ஓடும் உணர்வலையால் உதடுகள் துடிக்க, துமி துமி என இதயம் தாழமிட... வரம்புகள் கடந்துவந்த அந்த வண்ணச் சிட்டை...கைநீட்டி வதனி கட்டிக்கொண்டாள்.

## சர்வதேசியம்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

யின், ஆஸ்திரியா கூட இப்போது போர் தளபாட விற்பனையில் இணைந்து விட்டன. இந்நாடுகள் இத்தொழில்துறையில் ஐந்து கோடி மக்களை நிரந்தரமாக வேலையில் ஈடுபடுத்தியிருப்பதுடன், ஐம்பதிஞயிரம் விஞ்ஞானிகளை இராணுவ ஆராய்ச்சியில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இவர்களால் உற்பத்தி செய்யப்படும் இராணுவ விமானம் ஒன்றின் விலை பல லட்சம் டாலர்கள் முதல் பதுங்கிச் சென்று குண்டு வீசும் விமானம் ஒன்று 5000 லட்சம் டாலர்வரை விற்பனை செய்யப்படுகின்றன. விமானம் தாங்கிய போர்க் கப்பல் ஒன்றின் விலை 100 கோடி டாலர் வரை விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு புதிய அணு நீர்மூழ்கிக் கப்பல் 160 மில்லியன் டாலர்கள். விமானம் தாங்கி கப்பலை இயக்குவதற்கு நாளொன்றுக்கு 6 லட்சம் டாலர் செலவாகின்றது.

மனித சமுதாயத்திற்கு கல்லறை தோண்டும் ஆயுத உற்பத்தி வியாபாரிகள் அண்மையில் இராணுவ தகவல்களை பரிமாறிக் கொள்ளும் முழு வண்ணப் பத்திரிகையில் இப்படியானதொரு விளம்பரத்தைப் பிரசுரித்திருந்தனர். 'சாகடிக்கும் ஏவுகணையொன்றை தேடிக் கொண்டிருக்கிறீர்களா? RBS 70 அதிக ஆற்றல் வாய்ந்த வெடிமருந்தை அடைத்து வைத்திருக்கின்றது. மற்றெரு விளம்பரத்தில் ஓர் அடி நிச்சயமான சாவு, அதை எதுவும் நிறுத்த முடியாது? இது மனிதரை கலங்கவைக்கும் செய்தியாகும். இன்று கூட எம்மையெல்லாம் பாதிப்பது மரண வியாபாரிகள் தான்.

## ஆத்மஜோதி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றவன். இரண்டு வருடங்கள் [1960-61] அவருடன் நாவலப்பிட்டியில் கூடி வாழ்ந்தவன். அதன் பின்பும் 35 வருட காலமாகத் தொடர்பு!

மாஸ்றர் மிகவும் முற்போக்கான சிந்தனையாளர். அவரின் ஆத்ம ஜோதி நூல் நிலையத்தில் சமய நூல்களுடன் அகராதிகள், முற்போக்கான நாவல்கள் ஆகியனவும் இருக்கும். நான் எழுதிய ஒரு சிறு கதையைப் படித்துவிட்டு இதை நாவலாக எழுதுங்கள் என்று என்னை நாவலாசிரியராக்கியவர் அவர் தான். மலைக்கொழுந்து என்ற எனது நாவலில் அவர் ஒருபாத்திரம். பின்பு 28 வருடங்களுக்குப் பின் எழுதப்பட்ட நம்பிக்கைகள் என்ற நாவலிலும் அவர் ஒரு பாத்திரம். நமது சந்ததியின் எத்தனையோ தனி மனிதரின் வாழ்வில் அவர் மறக்க முடியாத ஒரு அங்கத்தவராக இருந்தார்.

கடந்த ஐந்து வருடங்களாக ஆத்மஜோதி முத்தையா அவர்கள் சமய வளர்ச்சிக்கு ஒரு தீவிரமான திட்டவட்டமான குறிக்கோள்களை அமைத்துச் செயற்பட்டார். 1992ல் அவர் இந்துசமயப் பேரவையின் தலைமைப் பீடத்தை ஏற்றது, நமது நாட்டின் சரித்திர வரலாற்றில் செறிவான செயலாகும். சமய வளர்ச்சி என்பது வெறும் சமய சடங்குகள் அல்ல. அது சமய ஒழுக்க சிந்தனைக்கும் சமூகத் தொண்டிற்கும் முக்கியம் கொடுக்கவேண்டும் என்று போதித்தார். கைதடி சைவச் சிறுவர் இல்லத்தைப் பொறுப்பேற்று கொள்கையைச் செயலில் காட்டினுர். இவற்றைப் பேணுவது நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடன் ஆகும்.

அவர் கனடா போகுமுன் 'மாஸ்றர், இந்த வயதில் குளிரான கனடாவுக்குப் போறீர்களே, ஒத்துக்கொள்ளுமா?' என்று கேட்டார் சிவநெறிப்புலவர் திரு. கனகராஜா அவர்கள்.

என்னுல் இயன்ற சமயத் தொண்டைச் செய்திருக்கிறேன். இதையும் செய்வோம். இந்தக் கட்டை இனி, இங்கே போனுல் என்ன? அங்கே போனுல் என்ன?' என்ருர் மாஸ்றர்.

தனது 77-வது வயதில் கனடாவில் அவர் அமரர் ஆனுர். ஆத்மஜோதி போன்றவர்களுக்கு எந்த மண்ணும் இன்ப மண், எந்த மக்களும் அன்பு மக்கள். அவருடைய சரித்திரத்தையும் நூல்களையும் படிப்பதால் வரும்கால சந்ததியும் நாம் பெற்ற அனுகூலத்தை அடைவார்கள்.

## மிதிக்காதே

(6ம் பக்க தொடர்ச்சி)

வலகத்தில் வேலையில் திறமை இவை மட்டுமே. ஆனுல் வேலைக்கு போகும் பெண்களிடம் எதிர்பார்க்கப்படுவது இது மட்டுமல்ல. வீட்டுவேலைகள் அவள் தலையில் சுமத்தப்படுகின்றது. இது உனது வேலை என காலாதி காலமாக வேரூன்றப்பட்ட இந்த நிலைப்பாட்டை அவனுல் மாற்றமுடியாது.

ஆணுக்கு நிகராய் பெண்ணை அறிவுபூர்வமாய் மட்டுமல்ல உணர்வு பூர்வமாயும் மதிக்க நாம் பழகவேண்டும்.

ஆழ்மனத்தின் வேர்கள் வரை புரையோடிப்போன இந்த எண்ணங்களை மாற்றிக்கொள்ள இந்தத் தலைமுறை தத்தளித்தாலும், இனிவரும் உலகையாவது இந்த மனநோய் அணுகாமல் வளர்க்க வேண்டும்.

நன்றி:
கொழும்பு பத்திரிகை

## இவ்வாரம் எப்படி?

24–09–95 முதல்
30-09–95 வரை

### மேடம்:

குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு, சுபகாரியங்களில் செலவினமுண்டு, தொழில் சுமுகமாக நடைபெறும், வருவாய் நன்ருக அமையும், பிரச்னைகள் சுமுகமாக தீரும், இனசன ஒத்துழைப்புண்டு, முயற்சிகளில் வெற்றியுண்டு, அதிஷ்ட வாரம்.

### இடபம்:

குடும்பத்தில் கருத்து வேற்றுமையுண்டு, சில எதிர்ப்புகளைச் சமாளிக்கவேண்டி வரும், தொழில் சுமாராக இருப்பினும் பணநிலை பாதிப்படையாது. பிறர் விஷயங்கள் தொந்தரவு தரும், அதிகாரிகள் குறை காண்பர், காரிய தாமதமுண்டு, மத்திம வாரம்.

### மிதுனம்:

குடும்பத்தில் செலவினங்களும் மனஸ்தாபங்களும் நிலவும், தொழிலில் நஷ்டமுண்டு, பணக்கொடுக்கல் வாங்கலினுல் பகைமை உருவாகும், பணியாட்களின் ஒத்துழைப்புக் குறைவாகவிருக்கும், வீண் யோசனைகளுண்டு. அமைதியற்ற வாரம்.

### கடகம்:

குடும்பத்தில் கருத்து மோதல் உருவானுலும் பாதிப்பிருக்காது, பொது நோக்கங்களுக்காக செலவுண்டு, தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிட்டாது. பிரச்னையொன்று மனத்தாங்கலைத் தரும், இனசன விரோதமுண்டு, மனச்சுமையான வாரம்.

### சிங்கம்:

குடும்பத்தில் பற்றற்ற தன்மையும், வீண் கவலையும் இருக்கும், வெளியிடத்து தொடர்புகள் திருப்தி தராது, தொழிலில் அலைச்சலுண்டு, பணநிலை திருப்தி தராது, காரிய பலிதம் தாமதமாகும், புத்திரர் வெறுப்புண்டு, குழம்பிய வாரம்.

### கன்னி:

குடும்பத்தில் அமைதி காணப்படினும் தேவையற்ற பிரச்னைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கும், தொழில் சுமாராக இருக்கும், அயலவர் உதவியுண்டு, கௌரவ பதவி கிட்டும், புதியமுயற்சி கைகூடும், நன்மை தராதவாரம்.

### துலாம்:

குடும்பத்தில் ஒற்றுமை நிலவினும் வைத்திய செலவினங்களுண்டு, தொழிலில் புதிய முதலீடுகளும், லாபங்களுமுண்டு. நண்பர் ஒருவரை பகைத்துக்கொள்ளலாம், பணநிலை திருப்தி தரும், தெய்வீக செலவினமுண்டு, பாதிப்பில்லாத வாரம்.

### விருச்சிகம்:

குடும்பத்தில் குழப்பங்கள் இருப்பினும் அனுசரித்துப் போதல் இருக்கும், தொழில் நிலை பாதிப்படையும், பணப் புழக்கம் தடுமாற்றம் தரும்; வேலைப்பழு அதிகமாகும், காரிய தாமதங்களுண்டு, ஒதுங்கிப்போகும் வாரம்.

### தனுசு:

நினைத்ததை முடிக்கும் ஆற்றல் இருக்கும், குடும்ப அமைதியும், ஒற்றுமையும் நிலவும், தொழிலில் மாற்றங்களும் லாபமும் அதிகமாகும், இனசனப் பகை நீங்கும், பணநிலை சரளமாக அமையும், அதி சிறப்பான வாரம்.

### மகரம்:

குடும்பத்தில் நிலவிய வேற்றுமை அகலும், இனசன உதவி கிட்டும், தொழில் நிலைகளில் கஷ்டங்கள் இருப்பினும் பாதிப்பு இருக்காது. புதிய கடன்கள் உருவாகும், சகோதர விரோதமுண்டு, பயண தாமதம் இருக்கும். அலைச்சல் வாரம்.

### கும்பம்:

குடும்பத்தில் குழப்பநிலையும் அமைதிக்குறைவு உண்டு, மனநிலை மந்தமடையும், எதிர்பார்த்த நன்மைகள் கிட்டாது இனசன வெறுப்பு நிலவும், துயரவாரம்.

### மீனம்:

குடும்பத்தில் பகை உணர்வு மேலோங்கும், குற்றங்களை மேல்நோக்கிப் பார்ப்பதால் பிரச்னையுண்டு, பணநிலை திருப்திதராது. அதிகாரிகள் துன்பம் தருவர், முயற்சிகள் காலதாமதமாகும், பெண்கள் பகையுண்டு, துன்ப சாகர வாரம்.

கணிப்பு: ஜோஸ்யர்,

## ஈழக்கடலில்

(4ம் பக்க தொடர்ச்சி)

டங்கள் ஆட்சிபீடம் ஏறினுன்.

மகாரட்டகா
[MAHARATTAKA]

இவ்வரசனுனவன் கலதநாகா என்பவனை வென்று ஒரே ஒரு நாள் மட்டும் ஆட்சி புரிந்தான்.

அபய-வட்டகாமினி
[VATTAGAMINI]

இவ்வரசன், மகாரட்டகா என்பவனை வென்று ஐந்து மாதங்கள் ஆட்சி புரிந்ததாக தீவவம்ச(பக்கம்-226)கூறுகின்றது.இதன்பின்இவனைவென்று ஐந்து தமிழரசர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சிக்கு வந்தனர். [தொடரும்]

## பிஜித்தீவு

[3ம் பக்க தொடர்ச்சி]

தார். அதன்பின்னரே சிறிலங்காவில் பௌத்தமதம் உள்ளது. ஆனுல் அதைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்றும், முன்னுள் ஜனுதிபதி பிரேமதாசா காலத்தில் பௌத்தமத வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட முப்பது இலட்சம் ரூபா பணத்துக்கு என்ன நடந்தது என்பது தனக்குத் தெரியாதென்றும் இவ் யப்பானிய மதகுரு கூறியுள்ளார். இந்தவகையில் தான் பௌததம் சிறிலங்காவில் கைக்கொள்ளப்படுகிறது. பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை. முதலில் பௌததமும் சிங்களமும் ஒன்றல்ல என்ற உண்மையைச் சிங்களவர்கள் தெரிந்து கொண்டால் எல்லாக் குழப்பங்களும் ஓரளவுக்குத தெளிவாகிவிடும்.

உ
முருகன் துணை

# நன்றி நவிலல்

## வி. சிவானந்தவல்லி

எமது மகளின் துன்பநிலையில் ஆதரவளித்த பேத்தியம்மன் கோவிலடி மக்களுக்கும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் அனைவருக்கும் அவரது மறைவை கேட்டதும் ஓடோடி வந்து எமது துயரத்தில் கலந்து கொண்டு சகல உதவிகளையும் தாமாகவே செய்த எம் ஊர்மக்களுக்கும் அயலூர் மக்களுக்கும் உற்ருர், உறவினர்கள், அன்பர்கள் யாவருக்கும் தகவல்களை விரைந்து அனுப்பி உதவிய வன்னித் தொடர்பகத்தினருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

சு. இராஜேந்திரக் குருக்கள்
குடும்பத்தினர்கள்
பா. விசுவநாதசர்மா

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்
நீர்வேலி. (ஏ 5228)

மில்க்வைற் தருவது
நீலசோப், அரை நீலசோப்
நீமியா உரம், சலவைத் தூள்
அண்ணு கோப்பிக் கடைகளிலும் கிடைக்கின்றது

அன்பளிப்பு

மில்க்வைற் நீலசோப் மேலுறை 50 க்கு ஒரு அப்பியாசக் கொப்பி.
36 மில்க்வைற் நீல சோப் கட்டிவரும்தாள் 50ககு ஒரு துவாய்.

“மில்க்வைற்”

(ஏ-5331)

பசுமை காண்போம்
பொருண்மியத் தடையை உடைப்போம்

# தியாகி திலீபன் நினைவாக இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகிலெப். கேணல் திலீபனின் 8வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று 24ம் திகதி ஒழுங்கு செய்யப் பட்டுள்ள உண்ணா விரத நிகழ்வுகளின் விபரங்கள்.

வலிகாமம் நல்லூர் வட்டம் ரேஸ்ரி கொம்பனி கந்தர் மடம் ஆர்.வி.ஜி நல்லூர் செட்டித்தெரு, சந்திரா கச்சான் அலுவா கொம்பனி, பவானி கச்சான் அலுவா கொம்பனி.

வலிகாமம் - சங்கானை வட்டம்: வணிகர்கழகம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள். ஊழியர்கள், அராலி சிற்றூர் மக்கள், அராலி இந்துக்கல்லூரி.

தீவகக்கோட்டம் (நல்லூரில் வேலணை/ சேர்.வயி/ து.ம.ம வித்தியாலயம்)

தென்மராட்சி (கைதடி) தனங்கிளப்பு அ.த.க பாடசாலை, மறவன்புலோ கோணேஸ் ச.ச.நிலையம், சிலன் நகர் குடியிருப்பு மக்கள்.

[சாவகச்சேரி] மீசாலை கைதடி. நுணாவில் மக்கள் சாவகச்சேரி, மீசாலை வணிகர் மன்றங்கள்.

[கொடிகாமம்] ப.தெ.வ அ.கூ.சங்கம், ப.நோ.கூ. சங்கம்.

[பளை] தம்பகாமம் சிற்றூர் மக்கள்.

வடமராட்சி [உடுப்பிட்டி) இளங்கோ, சோலிங்கன், மகாவலி ஜனசக்தி ச.ச.நி.உறுப்பினர்கள். அப்பிரதேச மக்கள், லிப்போ தனியார் கல்வி மன்றம், மாணவர் கல்வி மன்றம்.

[கரவெட்டி] நெல்லியட்டை நெல்.ப.நோ.கூ.சங்கம் ஊழியர்கள்.

வடமராட்சியில் கோட்டமட்டத்தில் மாணவர் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரத நிகழ்வில் இன்றையதினம் கரவெட்டியில் யாக்கரைக்கல்லூரி, கரணவாய் மகாவித்தியாலய மாணவர்கள் கலந்து கொள்வர்.

கடற்புலிகளின் யாழ் மாவட்ட பிரதேசங்களில் - வட்டாரீதியாக நாகர் கோவில் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரத நிகழ்வில் இன்றைய தினம் தாளையடிமக்கள் கலந்து கொள்வர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—09—24**

ஞாயிறு இரவு

8-02 தியாகி லெப் - கேணல் திலீபனின் 8ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - நா.கிருஸ்ணா எழுதிய - "அந்த நாள் நினைவு ஆறுமோ"
8-20 திலீபன் நினைவாக பாடல்கள்
8-30 செய்திகள்
8-40 தொடர் நாடகம் பொன்-கணேசமூர்த்தி எழுதிய "இலங்கை மண்" அங்கம் 12

**1995—09—25**

திங்கள் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள் அதனைத்தொடர்ந்து
8-00 மணிவரை நீங்கள் கேட்டவை - நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—09—24**

ஞாயிறு மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-15 தியாக தீபம்
5-30 கதம்பம்
6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-10 செய்திகள்
6-15 உங்கள் தெரிவு

## கடல்வழி

(1ம் பக்க தொடர்ச்சி)

களுக்கான பாதுகாப்பைகடற்புலிகள் குறைந்துள்ளதாகவும்ஜலன்ட் தெரிவித்துள்ளது. -வி

# பாடசாலை மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு பலத்த கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பல பகுதிகளிலும் ஈவிரக்கம் அற்ற மிலேச்சத்தனமான தாக்குதல்களை தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசானது மேற்கொண்டு வருகிறது. தொடருகின்ற இப்போக்கானது, சிறிலங்கா அரசின் மெய்யான நிலைப்பாட்டை, அதன் பேரினவாத கொடூரத்தை வெளிக்கொணருகிறது இவ்வாறு யாழ் வணிகர் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நேற்று முன்தினம் வடமராட்சியில் தொடர்ச்சியாக அப்பாவிமக்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. உச்சக்கட்டமாக நாகர் கோவில் மகாவித்தியாலயத்தின் மாணவர்கள் மீது விமானக் குண்டு வீச்சும், ரொக்கட் தாக்குதலும் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டன. பதினெட்டு மாணவர்கள் பலியாகியதுடன், பலரை முடமாக்கிய இக்கொடூரம் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது, கண்டிக்கப் படவேண்டியது.

யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்:- அரசு தனது ஆயுதப் படைகளை தமிழ் மக்கள் மீது ஏவிவிட்டு தமிழ் மக்களை அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு இராணுவ நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் விமான எறிகணை வீச்சு மத்தியில் பாதுகாப்புத்தேடி ஓடிய சின்னஞ்சிறுசுகளைத் தாக்கியதன் மூலம் அரசின் பேரினவாதப் போக்கு அம்பலமாகியுள்ளது. சிறிலங்காவின் இப்போக்கினை அனைத்துலகமும் கண்டிக்கவேண்டியது அவசியமாகிறது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. -ரி

# ஐயாயிரம் பொதுமக்கள் மந்திகையில் தஞ்சம்

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியிலும், வடமராட்சி கிழக்கிலும் தொடர்ந்து நான்கு நாட்களாக நடாத்தப்பட்டு வரும் தாக்குதல்களினால் பருத்தித் துறை கரையோரப்பகுதி தும்பளை, வராத்துப்பளை, திக்கம், அல்வாய் உடுப்பிட்டு, நெல்லியடி, புலோலி கிழக்கு, கற்கோவனம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள், மந்திகை மருத்துவ மனை வளவிலும், மந்திகைச் சந்தியிலுள்ள கடை வாயில்களிலும், சஞ்சமடைந்துள்ளனர். இதனால், இப் பகுதியில் சன நெருக்கடி காணப்படுகின்றது.

வடமராட்சிப் பகுதிகளில் ஏறிகணை புக்காரா தாக்குதலுக்கு பயந்து இடம் பெயர்ந்திருக்கும் சுமார் 5000க்கு மேற்பட்ட மக்களுக்கான, மூன்று நாள் உணவை வழங்க பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ.சிவசுவாமி மேற்கொண்டுள்ளார் I60-ரி

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வடக்கு, சுன்னாகம் - மேற்கு, சுன்னாகம் மத்தி, சுன்னாகம் - தெற்கு சுன்னாகம் கிழக்கு. கந்தரோடை ஏழாலை மேற்கு ஏழாலை வடக்கு, ஏழாலை மத்தி புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினை குப்பிளான் தெற்கு குப்பிளான் வடக்கு. ஏழாலை கிழக்கு, ஏழாலை தெற்கு. ஏழாலை தென் மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளின் வாழ்ந்த மக்களிற்கான தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பான கலந்துரையாடல் உரும்பிராயில் அமைந்துள்ள தியாகி அன்னை பூபதி ஞாபகார்த்த மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மாலை 5-00மணிவரை நடைபெறும். சி

## போர்க்கால கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியினர் இன்றும் நாளை 25ம் திகதியும் விளை பூமி போர்க்கால வேளாண்டு உற்பத்தித் திட்டக் கருத்தரங்கினை கிளிநொச்சி பல்கலைக்கழக விவசாய பீடத்தில் நடாத்த உள்ளனர்.

## அரசின் திட்டமிட்ட

(1ம் பக்க தொடர்ச்சி)

ஆனால் சிறிலங்கா அரசு எதையும் செவிமடுக்கவில்லை. தொடர்ந்து சிறிலங்கா முப்படைகளின் தாக்குதல்களால் விளைந்து வரும் அனர்த்தங்களினால் தமிழ் மக்கள் படும் இன்னல்கள் அளவற்றுப் பெருகி வருகின்றன. மனித உரிமைகளை மதிக்காது மனித நேயத்தை ஒதுக்கி வைத்து விட்டு தமிழ் மக்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறது

இச்செயற்பாடுகளின் உச்சக் கட்டமாக கடந்த 20-ம் திகதி முதல் வடமராட்சிப் பகுதிகளில் பரவலாக விமானக் குண்டு வீச்சுக்களும், எறிகணை வீச்சுக்களும் பெருமளவில் நடத்தப்பட்டு வருகின்றன மிலேச்சத்தனமான கொடூரமான இச்செயலை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நாகர்கோவில் மகாவித்தியாலயம் வெட்டவெளியில் அமைந்துள்ளது; அப் பாடசாலையின் மேல் வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. பாடசாலை என எளிதில் இனங்காணக்கூடியதாக இருந்தது. அப்படி இருந்தும் பாடசாலையைச் சுற்றி 22-09-95 அன்று விமானக் குண்டு வீச்சு பலமுறை நடாத்தப்பட்டுள்ளன.

பாடசாலைப் பிள்ளைகள் பாதுகாப்புத் தேடி ஓடிய நேரத்தில் வெள்ளைச் சீருடை அணிந்த மாணவர்கள் என அறிந்திருந்தும் இவர்கள் மீது விமானக் குண்டு வீச்சு நடாத்தப்பட்டுள்ளது மிக மிகக் கொடூரமான செயலாகும்.

இச்சம்பவத்தில் 18 மாணவர்கள் அவ்விடத்திலே உடல் சிதறிப் பலியானார்கள். தங்கள் பிள்ளைகளைக் காப்பாற்ற வந்த பெற்றோர்கள் 12 பேர் எறிகணை வீச்சுக்கு பலியானார்கள்.

வடமராட்சிப் பகுதியில் பரவலாக நடாத்திய விமானக் குண்டு வீச்சு, எறிகணை வீச்சுக்களினால் 40 பேர் பலியாகியுள்ளனர். 180 க்கும் மேற்பட்டோர் படுகாயத்துக்குள்ளாகியுள்ளனர் சிறிலங்கா அரசின் தொடரும் ஈவிரக்கமற்ற, மனித நேயமற்ற கொடூரங்களை சர்வதேச சமூகம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதை தவிர்த்து. சிறிலங்கா அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டியது மனிதாபிமானத்தின் பேரால் மிக அவசியமானதாகும்.

அத்துடன் இச்சம்பவங்கள் பற்றி ஜனாதிபதிக்கும், வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கும் மகஜர் மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. -ச-ரி

## சந்திரிகாவின்

(1ம் பக்க தொடர்ச்சி)

வில்லையென்று, அண்மையில் நடைபெற்ற கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது:

விடுதலைப் புலிகளை ஒதுக்கி விட்டு, தமது அரசியல் தீர்வுத் திட்டத்தை தமிழ்மக்கள் மீது திணித்து தமிழர்களை ஏமாற்ற அரசு திட்டமிட்டுள்ளது; விடுதலைப் புலிகள் மீது பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்காக அரசு வடக்கே இராணுவத்தைக் குவிக்கத் தொடங்கிய வேளையிலேயே 'அவ்ரனேவ்' விமானம் கடலில் வீழ்ந்தது; இது அரசின இராணுவ நடவடிக்கைக்குப் பெரியதொரு பின்னடைவாகும்.

விடுதலைப் புலிகளும் அரசும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மத்தியஸ்தத்தை வைத்து, சமாதானப் பேச்சுக்களைத் தொடங்காமல், இராணுவத் தீர்வை நம்பியிருந்தால் அது ஒருபோதும் பிரச்னையை தீர்த்துவிடாது என்றும் வெரித்தாஸ் தெரிவித்தது- -வி-ரி

## யாழ், குடாவில்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

எமக்கும் - அரசுக்குமிடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்ற போதும், மறைமுகமான ஒரு இராணுவத்திட்டத்துடன்தான் அரசு செயற்பட்டுள்ளது. இப்போது வெளிப்படையான இராணுவத்திட்டத்துடன அரசு செயல்படுவதைப்பார்க்கும் போது, இந்த அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள், தீர்வுத்திட்டங்கள் எல்லாம் ஒரு இராணுவத் தந்திரத்திற்குட்பட்ட சமாதான முயற்சிகளாகவே இருக்கின்றது.

விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக மதித்து, அவர்களை அங்கீகரித்து, தமிழ் மக்களின் அபிலாசைகளையும். கோரிக்கைகளையும் அங்கீகரித்து நேர்மையாக நடப்பதாகத் தெரியவில்லை.

இலங்கை அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை எப்போது கைவிடுகின்றதா அப்போதுதான் சமாதானத்திற்கான சூழ்நிலை பிறக்கும் என்றும் கூறினார். வி-ரி

## திலீபன்

(1ம் பக்க தொடர்ச்சி)

டித்தனர்.

சிரமதானப் பணிகளிலும் ஈடுபட்டனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் நேற்றும் வழமை போன்று பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

வன்னிப் பிரதேசத்திலும் தியாகியின் நினைவு தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன; -170-162-ரி

## ஆர்ப்பாட்டப் பேரணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புரச் சங்கம், சனசமூக நிலையங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள், வெதுப்பக உரிமையாளர் சங்கம், மத அமைப்புக்கள், சிற்றூர்தி சேவைச் சங்கம், இசை அலங்காரிப்பாளர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகம், தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றுமாறு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. சி-ரி


**யாழ். மாவட்ட**

**வெதுப்பக உரிமையாளர் சங்கம்**

உடுவில் / தெல்லிப்பழைக் கிளை

**அங்கத்தவர்களுக்கு**

மேற்குறிக்கப்பட்ட கிளையினது
சகல அங்கத்தவர்களையும்
**27 – 9 – 95 புதன்கிழமை மதியம் 12 மணிக்கு**
மாவட்டத் தலைவரின் தலைமையில்
தலைமைச் செயலகத்தில்
நடைபெறும் கூட்டத்திற்கு தவறாது
சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாவட்ட செயலாளர்.

யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(ஏ-5329)



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.